உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி06 ஞாயிற்றுக்கிழமை(22-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:262

# இராணுவத்துக்குப் புதிதாக 10,000 பேரை திரட்ட முயற்சி

## நாளை முதல் நேர்முகப் பரீட்சை

கொழும்பு,ஒக்ரோபர்22

**புதிய அரசாங்கம் பதவியேற்ற கையோடு இராணுவத்துக்கு மேலும் பத்தாயிரம் பேரைத் திரட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பொருட்டு நாடளாவிய ரீதியில் நாளை தொடக்கம் அடுத்தமாதம் 10ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.**

வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் போரை மேலும் தீவிரப்படுத்துவது என்ற புதிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு இணங்க இராணுவ ஆளணியினரை திரட்டுவதற்கு மீண்டும் முயற்சிக்கப்படவுள்ளது.

இந்த வருடத்தில் பல தடவைகள் புதிதாக ஆள்திரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அவை முழு அளவில் பயனளிக்கவில்லை.

தேர்தல் முடிந்த கையோடு நேர்முகப் பரீட்சை நடத்தினால் தேவையான எண்ணிக்கையினரை திரட்ட முடியும் என்ற நம்பிக்கையுடன்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நீதி அமைச்சர் உறுதி

கொழும்பு,ஒக்.22

கொழும்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படும் தமிழர்களை மரியாதையுடன் நடத்துவதற்காக தொல்லை தவிர்ப்புக் குழுவை சிறப்பாக இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பலர் கைது செய்யப்படுகின்றார்கள். இவர்களில் குற்றமற்ற

(10ஆம் பக்கம் பார்க்க)



பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக நேற்று எடுத்துச் செல்லப்பட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## தென் பகுதி பத்திரிகையாளர்கள் யாழ். வர அனுமதிக்கப்படவில்லை

### 'ராவய' பத்திரிகையாளர் தகவல்

கொழும்பு,ஒக்.22

யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்கு தென்பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு அரசு அனுமதி வழங்க மறுத்து விட்டதாக "ராவய" பத்திரிகையாளர் ஜெயசிறி ஜெயசேகர பி.பி.ஸி.யின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

"சுயாதீன ஊடக முன்னணியைச் சேர்ந்த வறான் கருணாதிலக, "ராவய" பத்திரிகையைச் சேர்ந்த சுனில் ஜெயசேகரா உட்பட பல பத்திரிகையாளர்கள் நிமலராஜனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் செல்ல அனுமதி கோரியிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு இதற்கு இணக்கம் தெரிவித்த சில மணித்தியாலங்களில் அனுமதியை வாபஸ் பெற்று விட்டது.

இது தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் மற்றும் தகவல் திணைக்களப் பணிப்பாளரிடம் தெரிவித்த போதும் அனுமதி கிடைக்கவில்லை இப்படித் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜனின் இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக்.22

பிரபல பத்திரிகையாளரும் சர்வதேச மற்றும் சிங்கள ஊடகங்களின் செய்தியாளருமான மயில்வாகனம் நிமலராஜனின் இறுதிச் சடங்கில் நேற்று ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

யாழ்.கச்சேரியடியிலுள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு நேற்று பெரும் எண்ணிக்கையான மக்கள் நேரில் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

மதகுருமார்கள், யாழ்.செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரும் நேற்று தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

தென்னிந்தியத் திருச்சபை ஆயர் வணபிதா எஸ்.ஜெபநேசன் உட்பட பல கிறிஸ்தவ மதகுருமாரும் அவரது இல்லத்துக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

நிமலராஜன் கொல்லப்பட்ட சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அவரது பெற்றோர்கள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து அழைத்துவரப்பட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் இறந்த 18 பேர் விவரம்

வவுனியா,ஒக்.22

பல்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த 18 பேரின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் தமது "புலிகளின் குரல்" வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

பெயர் விவரம் வருமாறு:-

★ அன்பரசன்(தெய்வேந்திரன் சசிதரன் - மட்டக்களப்பு)

★ வேலவன் (இரத்தினசிங்கம் நாகரூபன் - யாழ்ப்பாணம்)

★ ரஞ்சித்( மணியம் மகேஸ்வரன் - கிளிநொச்சி)

★ ஆத்திசூடி(திருச்செல்வம் சசிதரன் - யாழ்ப்பாணம்)

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜனின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பு

### டாக்டர் ஜயலத் குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.22

பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பு என்று நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன். இந்தக் கொடூரக் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த கம்பஹா மாவட்ட எம்.பியான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் ஒரு துணிச்சலான பத்திரிகையாளன். குடாநாட்டு மக்களின் அவலங்களை மட்டுமன்றி அவர்களுக்கு எதிரான அடக்குமுறையையும் வெளிக்கொணர்ந்தவர் -

குடாநாட்டில் இடம்பெற்ற படுகொலைகள், கற்பழிப்புகள், மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்த நேர்மையான பத்திரிகையாளன் ஆவார். வடக்கு-கிழக்கு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி, நீதியை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புப் பகுதியில் புலிகள் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்!

மட்டக்களப்பு,ஒக்.22

மட்டக்களப்பு மாவட்டம் - மயிலம்பாவெளி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்றிரவு தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலை நடத்தினர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றிரவு எட்டுமணிக்கு ஆரம்பித்த இந்தத் தாக்குதல் சுமார் இரண்டு மணி நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதலுடன் முகாம் மீது கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தையும் புலிகள் மேற்கொண்டனர் எனவும் -

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரும் பதில் தாக்குதலை நடத்தினர் எனவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது. சேதவிவரங்கள் பற்றித் தெரியவரவில்லை. (இ-7-21)

## ஆயுதங்களை திரும்ப அரசிடம் ஒப்படைக்க சம்மதிப்பாரா?

### டக்ளஸிடம் ஆனந்தசங்கரி கேள்வி

கொழும்பு,ஒக்.22

பல லட்சம் மக்களின் நன்மை கருதி அரசு கொடுக்கும் பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டு, ஆயுதங்களை திரும்ப அரசிடம் ஒப்படைக்க அமைச்சர் டக்ளஸ் சம்மதிப்பாரா?

இவ்வாறு தாம் விடுத்த அறிக்கை ஒன்றில் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் விடுத்த, நிமலராஜன் படுகொலை சம்பந்தமான அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், நேற்று விடுத்த அறிக்கையிலேயே ஆனந்தசங்கரி இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை சம்பந்தமாக என்னால் விடப்பட்ட கண்டன அறிக்கையை ஈ.பி.டி.பி.செயலாளர்நாயகம் தப்பா

(10ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் பூரண கட்டுப்பாட்டில் நாகர்கோயில் இருப்பதாக தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.22

நாகர்கோயில் பகுதியை படையினர் பூரண கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

தரைப்படையினர் இந்தப் பகுதியை தற்போது தமது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். முன்னணிப் பாதுகாப்பு அரண்களும் சீரமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தற்போதையதாக்குதலை முறியடித்துள்ள படையினர் நேற்று முன்தின மிரவு புலிகளின் 21 சடலங்களைக் கைப்பற்றினர்.

தரையில் நடந்த மிகப்பெரிய மோதலில் 80 புலிகள் உயிரிழந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. பீரங்கிகள், மோட்டார்கள், மற்றும் நவீனஆயுதங்களுடன் விடுதலைப்புலிகள் படையினரின் முன்ன

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## லவ்பேட்ஸ்

லவ்பேட்ஸ் (LOVE BIRDS) பச்சை, நீல நிறக்குருவிகள் விற்பனைக்குண்டு. ஞாயிறு காலை 10 மணிக்கு பின்னர் 67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (79694)

## மணமகன் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிப்பாளராகக் கடமை புரியும் அத்த நட்சத்திரம், 1ஆம்பாதம், 8 இல செவ்வாய்(4பாவமுள்ள), 27 வயதுடைய, பட்டதாரியான ஒரே மகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனமாக யாழ். நகரில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடும் தோட்டக்காணியும், பணமும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: விள.இல.1119, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (79672)

யாழ்.இந்து குடும்பத்தைச சேர்ந்த மணமகளுக்கு செவ்வாய்க் குற்றமுள்ள 35-40க்கும் இடைப்பட்ட வயதுள்ள தாரமிழந்த மணமகன் தேவை. விள.இல.1122, மே/பா உதயன். (79723)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றம் உள்ள 5'3'' உயரமான நற்குணம்மிக்க அழகிய அரச தொழில் பார்க்கும் பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் தொழில் புரியும் தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1121, மே/பா - உதயன். (79713)

## சித்திவிநாயகர் சோதிடம்

சாவகச்சேரியில் இயங்கிய மேற்படி ஜோதிட நிலையம் தற்பொழுது விஸ்வப் பிரம்மஸ்ரீ மா. தங்கவேல் 44/1, யாழ். வீதி பெருமாள் கோயில் முன் ஒழுங்கை எனும் முகவரியில் இயங்குகிறது. ஜாதகம் கணிக்க, விவாகப் பொருத்தம் என்பன பார்க்கப்படும். (79622)

## நாய்க்குட்டி விற்பனை

நல்ல இன Dashound நாய்க் குட்டிகளும் ஒரு Bulldog ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (79666)

## தேவை

A-30 CAR, PARTS க்கு (பாட்ஸ்) தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.
T.P.No-070-212952 (79613)

## (O/L) கணிதம்

40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைவதற்கு ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடை வகுப்புக்களும் நிறைவேற்றப்படும். க.ஆறுமுகநாதன், No. 102/12 காளிகோயில் பின் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (79705)

## விற்பனைக்கு

Hero Honda CD 100SS மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 67, செட்டித்தெரு, நல்லூர். (79627)

## தவறிவிட்டது

குணத்துரை நிறைஞ்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (782802070v) யும், விசேட அடையாளஅட்டை (0904000637)யும் 17-10-2000 செவ்வாய் அன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு அல்லது ராகம்ஸ் பட்டுச்சோலையிலோ ஒப்படைக்கவும். (79699)

யோகராசா யோகேஸ்வரி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.516972530v) விசேட அ.அட்டை (இல. 0903031545) என்பன 20.10.2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்.கே.கே.எஸ்.வீதியில் உள்ள கௌரி அழகு மாடத்திலோ, அல்லது மிதிலா அழகு மாடம் ஆவரங்காலிலோ ஒப்படைத்து உதவவும். (79727)

கமல்நிஷாந்த லோகதர்சினி என்பவரது விசேட அடையாள அட்டையுடன் கைப்பையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இலங்கைநாதன் (வெற்றிலைக்கடை நவீன வைரவர் கோயிலடி) என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (79711)

செல்வி றேக்கா பிரான்சிஸ் குணநாயகம் என்பவரது தேசிய அ.அ(இல.816921686v) யும், விசேட அ.அ.(இல.0901007979)யும் கடந்த 19.10.2000 அன்று பிறவுண் றோட்டுக்கும் மிருக வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 42/7 கந்தப்புசேகரம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (79717)

## விற்பனைக்கு

WEGA, SONY T.V 25' xF 25 M8J V.C.R PANASONIC S.D 530 V.C.D.PLAYER D.V 8000 (JAPAN) AUDIO-VIDEO C.D விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: P. பரமேஸ்வரி, சேர்ச் முன் ஒழுங்கை, உரும்பிராய். (79688)

புத்தம் புதிய M.D90-21 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- இல.39, நல்லூர் குறுக்குவீதி, நல்லூர். (79728

நல்ல நிலையிலுள்ள 3.5, B.S.A மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr.E. உமாகாந்தன், செம்மணி வீதி, வெயிலுகந்த பிள்ளையார் கோயில் முன்பாக நாயன் மார்கட்டு, யாழ்ப்பாணம். (79708)

## இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். இன்று விசேட சேவை. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (79668)

**உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம்**

காலம் : இன்று (22.10.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு
இடம் : பாடசாலை மண்டபம்
அ.பஞ்சாச்சரம் (செயலாளர்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
யா/தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவன்



**கந்தசாமி ராம்**
172 புள்ளிகள்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்பு
மாமாக்கள்

பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (79730)

## பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட வேலை நிறுத்தம் ராணுவ அதிகாரிகள் மற்றும் பொலீஸாருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து கைவிடப்பட்டது.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் எஸ்.எஸ்.மகாதேவன் (வயது 57), பஸ் சாரதியான எஸ்.சச்சிதானந்த சர்மா (வயது 53), நடத்துனர் பி.யோகராசா ஆகியோர் அச்சுவேலி பஸ் நிலையப்பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டனர்.

சம்பவதினம் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பஸ் சாரதியும், அச்சுவேலி மினிபஸ் சாரதியும் வழியில் வாக்குவாதப்பட்டனர் எனவும் -

இது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யவே இ.போ.சபையின் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் அங்கு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸில் முறைப்பாடு செய்துவிட்டு வந்த சமயமே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் பற்றி அறிந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி.எஸ். சொக்கலிங்கம் இராணுவ அதிகாரிகளுடன் இது விடயமாகத் தொடர்பு கொண்டதை அடுத்து சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சிலர் அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். (இ-7-109)

## செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பாட செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். மேற்படி செயற்றிட்ட போதனாசிரியர்களை மாணவர் விவரங்களுடன் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

**SHAMROCK**
Gr. 7, 8
ஆண்டு இறுதிப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன. (79753)

## விற்பனைக்குண்டு

4 அடி நீளமுள்ள இங்கிலாந்து லேத்தும் அதற்குரிய உபகரணங்களுடன் என்ஜினும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
செரக் தொலைத்தொடர்பு நிலையம்,
79, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.
T.P.2672 (79748)

**ராஜா (யாழ்ப்பாணம்)**
விஜய், ஜோதிகா, விஜயகுமார் மற்றும் பலரின் நடிப்பில்
**குஷி**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.) (C/13411)

**நாகம்ஸ் சுன்னாகம்**
அநேக ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
விஜய், சிம்ரன் நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.) (79735)

# COMPUTER PENCIL 2B

விற்பனைக்கு வந்துள்ளது கைவசம் சிறு தொகை உள்ளது முந்துங்கள்

**போஸ்கோ**
3 ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம். (C/13530)

## அவசர கலந்துரையாடல்

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம் 1999 - 2000 கல்வியாண்டு செயற்குழு உறுப்பினர்களுக்கு மலர் வெளியீடு தொடர்பான கலந்துரையாடல் நாளை (23-10-2000) திங்கட்கிழமை மதியம் 1.00 மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாணவர் ஒன்றியம்
உயர் தொழில் நுட்பநிறுவனம்.
(79741)

## கண்ணீர் அஞ்சலி

எமது இந்து மாமன்ற உறுப்பினரும் நாவலடி ஞானவைரவர் தேவஸ்தானத்தின் உப தலைவருமான

**முத்துவேலு புலேந்திரன்**

அவர்கள் 21-10-2000 அன்று காலமானதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்து மாமன்றம்
நாவலடி ஞான வைரவர்
தேவஸ்தான. நிர்வாகிகள். (79746)

*மயிலு வீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

## கண்ணீர் அஞ்சலி



**செல்வி தர்சினி மாணிக்கவாசகர்**

20.10.2000 அன்று இறைபதம் எய்திய விஞ்ஞான பீட மூன்றாம் வருட மாணவி செல்வி தர்சினி மாணிக்கவாசகர் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். இவரின் பிரிவால் துயரடையும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

குறிப்பு:- விஞ்ஞானபீட மாணவர் அனைவரையும் இன்று காலை ஞாயிற்றுக் கிழமை 8.30க்கு மாணவர் பொது அறையில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (79739)

## கண்ணீர் அஞ்சலி

We Serve

எமது கழகத் தலைவர்
**லயன் க.மயில்வாகனம்** அவர்களின் மகன்

**மயில்வாகனம் நிமலராஜன்**

அவர்களின் அகால மரணத்தால் துயருற்றிருக்கும் இவ்வேளையில்; அவர் தம் குடும்பத்துக்கு எமது கழகம் சார்பில் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

ஜீ.ரி.ஞானசேகரவேல்,
செயலாளர்
கோப்பாய் லயன்ஸ் கழகம்.
(79747)

| | | | |
|---|---|---|---|
| | சனி | வியா | ரா |
| | இராசிச் சக்கரம் | | சந் |
| | | | செ |
| கே | வெ | சூ ▼ | புத |

மாற்றம்:-

21-10-2000 இல் பூசம் -நட்சத்திரம் சந்திரன் கடக இராசியில் நிற்கும்.

27-10-2000 இல் செவ்வாய் கன்னி இராசியில் மாறும்.

அரசியலில் ஒரு தளர்வன நிலை. முன்னைய ஜனாதிபதி ஒருவருக்கு இன்றைய சபாநாயகர் சொன்ன தீர்க்கதரிசனத்தை ''நான் ஒரு நாள் இந்த சிற்றில் இருப்பேன்'' என்றதை மக்கள் நினைப்பார்கள் பேரம் பேசுவது, பதவி பெறுவது அரசியலில் சர்வசாதாரணம். இந்தியாவின் கருத்துக்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும். இந்தியாவில் வீரப்பனைப் பிடிக்க திட்டமிடப்படும். வடக்கில் பதற்றம் நிலவும். தெற்கில் பேச்சுக்கள் தொடரும் என்ற நிலை ஏற்படும் மத்திய கிழக்கில் விட்டு விட்டு தாக்கங்கள் ஏற்படும். அமெரிக்காவின் ஜனாதிபதியின் சமாதானப் பேச்சுக்கள் மத்திய கிழக்கு நாட்டுத்தலைவர்களுடன் தொடரும். கிழக்கு மேற்கு நாடுகளில் இயற்கையின சீற்றம் விட்டுவிட்டுக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

# 21-10-2000 - 27-10-2000

## மேடம்

அச்சடித்துச் சேர்த்த பணமும், அச்சமுறச் செய்து பறித்த பணமும், மக்கள் மனம் நோகவாங்கிய பொருளும் அரைகுறையில் ஓடி மறைந்துவிடும். எனவே நீங்கள் போராடி எதிலும் செயற்படுங்கள். மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாத வெற்றி தான் உண்மை வெற்றி என்பதை அறியுங்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய அணுகு முறைகள் இலாபங்களைத் தரும். எதிர்ப்பாலாரின் எதிர்ப்புக்கள் மேலிடும். போக்குவரத்தில் நிதானமாக

## மகா தேவா ஜோதிடம்

இருக்கவும் வாகன சுகம் கிடைக்கும். உரசல்காயம் தலைநோ, கை கால்பிடிப்பு, நரம்புச் சோர்வு, தோல் வருத்தங்கள் என்பன கொடுக்கும். பாதுகாப்புத்துறை, கமிஷன்துறை, எண்ணெய்த் துறை, குருத்துறை என்பனவற்றால் இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்—புதன், வியாழன்.

## இடபம்

சிலர் பந்தம் பிடித்தாவது காரியங்களைச் சாதிக்கிறார்கள்—அதில்செருப்புத்தூக்கித் தொண்டுசெய்வதில், அதிக நன்மை அடைவதில் கருத்தாக இருக்கின்றார்கள். ஆடுவதும் பாடுவதும் காசுக்கு என்பதில் கருத்தாக இருக்கின்றார்கள். காசுதான் வாழ்க்கை அல்ல என்பதை அறியார்கள் போலும். எனவே நீங்கள் கடமையில் கருத்தாக இருங்கள். பொறுமையின் சிகரமான உங்களுக்கு பெரியவர்கள், நண்பர்கள் உதவிகள் செய்து தருவார்கள். சிரசு, கழுத்து வருத்தங்கள், சலரோகங்கள் போன்றவை வரஇடமுண்டு. பிரயாணத்தில் பொருட்களைத் தவறவிட நேரிடும். மருந்துத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை—மார்க்கற் வியாபாரம் போன்ற துறைகளில் தொடர்பானவர்கள் இலாபங்கள் — நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்—புதன், வியாழன்.

## மிதுனம்

எங்கும் போட்டிதான் அதிலும் எதிராளிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்காமல் மடக்கப் பார்க்கிறார்கள். இதைச் சொன்னால் 'இன்று போய் நாளை வா' எனச் சொன்ன இராமபிரானா நாம் எனக்கேட்கிறார்கள். கலியுககாலம் எனப் பறைசாற்றுகிறார்கள். மனச் சஞ்சல மற்ற நிலையில் தொழில செய்துவாருங்கள். அதனால் அதிக இலாபம், நன்மைகள் ஏற்படும். சகோதரமொன்றுடன் கருத்து வேற்றுமை வர இடமுண்டு. அரச அதிகாரிகள், அரசியலில் தொடர்பானவர்களின் தொடர்புகளால் சில காரியங்களைச் செயற்படுத்த ஓடியாடித்திரிவீர்கள். சிலருக்குப் போட்டிகள் சில விஷயங்களில் ஏற்பட இடமுண்டு. மலச்சிக்கல், தலைவலி, களைப்பு, காயங்கள் வர இடமுண்டு. கலப்புத் தொழில், தரகுவேலைகள், எண்ணெய்வியாபரம், இரும்புத்துறை, குருத்துறை, போன்றவற்றில் தொடர்பானவர்கள். அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்—புதன், வியாழன்.

## கடகம்

திரிசங்கு சொர்க்கம் — அரசியலில் அம்மா மறைந்தாலும் ஐயாவுக்கு ஒரு விதத்தில் நன்மை தான். இரத்த பாசம் கடைசி நேரத்தில் வேலை செய்யும் என்பதை எவரும் மறக்கமாட்டார்கள். பாச நேசத்தை தொழில் ஸ்தானத்தில் காட்டமுடியாது. ஆனால் அரசியலுக்கு இது விதிவிலக்காகும். எனவே நீங்கள் தொழில் ஸ்தானத்தில் இலாபம் கருதிச் செயற்படுங்கள். புதிய திட்டங்கள், நண்பர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். எதிர்ப்பாலார் உதவி செய்வர். வயிற்று வருத்தம், உணர்ச்சிகளால் வேதனை, சலவருத்தம், மூட்டுப்பிடிப்பு, நெஞ்சு வருத்தம் என்பன கொடுக்கும். கடல் தொழில், போக்குவரத்துத் துறை, வியாபாரம், செய்தித் துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் இலாபங்களும் மாறிமாறிக் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன்.

## சிங்கம்

உண்மை உழைப்பாளிகளையும், தர்மப் போராட்ட வீரரையும் இலர் தவறாக எடை போடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு சத்திய சோதனை வருவது இயல்பு. அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும். காய்த்த மரம் தான் கல்லெறிபடும். அதற்காக அம்மரம் காய்க்காமல் விடுவதில்லை. எனவே தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டமிட்டுத் தொடர்ந்து செயற்பட்டு வாருங்கள். அதனால் நன்மைகள் ஏற்படும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அதிகாரிகள், நண்பர்கள் உதவிகளைச் செய்வார்கள். வாய் வுத் தொல்லை, உஷ்ணபீடைகள், விறைப்பு என்பனவரும். நிர்வாகத்துறை, பிரயாணத் துறை, ரீ.வித்துறை, அச்சுத் துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் காலமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன், வியாழன்

## கன்னி

தெய்வ நம்பிக்கை, விடாமுயற்சி, உறுதி நிலை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இருப்பதனால் தான் நல்லவர்களால் இறை அடியார்களால் அடிக்கடி காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே நேர்மையுடன் தொழில் ஸ்தானத்தில் கலகலப்பாக செயற்படுங்கள். இலாபங்கள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். புதிய இடாம்பீகப் பொருள்களால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களின் விருந்துகளுக்குச் சென்று கலகலப்பாக இருப்பீர்கள். காசில்லாமல் எத்தனை அலுவல்களைச் சிரித்தும், கதைத்தும் செயற்படுத்த முனைவீர்கள். சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, தரகுத்துறை, இசைத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நான்:- புதன், வியாழன்.

## துலாம்

அதிக சுகத்தை அனுபவிப்பவர்கள் தம்மை அடிக்கடி சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அல்லது உழைப்பு, பொருள் வரவு குறைந்த நேரத்தில் வேதனையும், சோதனையும் வரச் செய்யும். எனவே தொழில் ஸ்தானத்தில் தளம்பல் நிலை வராது பார்த்துக்கொள்ளுங்கள். ஏட்டிக்குப் போட்டிகள் ஏற்பட்டபடி இருக்கும். எனினும் நீங்கள் சமாதானத்தூதர் அல்லவா? கொஞ்சம் புத்தி சாதுரியமாக நடந்து சமாளித்து, சிரித்து கைகுலுக்கி காரியங்களைச் சாதித்து வாருங்கள். மற்றவர்களின் அசைவில் பார்த்து அவரை எடைபோடும் நீங்கள் சாதிக்க முடியாதது எதுவுமில்லை நாரிநோ, வயிற்றுப்பொருமல், முதுகுவலி, தோல் வருத்தங்கள் வரஇடம் உண்டு நீதித் துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்-: புதன், வியாழன்.

## விருச்சிகம்

வெளிப்படையாகப் பிறரை தர்க்க ரீதியாக மடக்கப்பார்ப்பதனால் பலரின் பகையைச் சிலர் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். உண்மைக்காக உறுதியாக நின்று போராடாமல் விடமாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் வரவேற்று உங்கள் ஆலோசனைக்காகச் சிலர் காத்திருப்பார்கள். நண்பர்களுக்காக ஓடியாடித்திரிந்து ஆலோசனை கூறுவீர்கள். நன்றியுடன் உதவி செய்தவர்களுக்குப் பல உதவிகளைச் செய்து வருவீர்கள். எதிர்ப்புக்களைச் சமாளித்து வரும் நீங்கள் உணர்ச்சிகளுக்கு கட்டுப்பட்டு இருந்து வேதனைப்படுவீர்கள். உஷ்ண பீடைகள், காலில் அடிபடல், தொண்டைநோ, நெஞ்சுச் சளி என்பன வருத்த இடஉண்டு. பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை, இரசாயன வேலை, பரிசோதனைத் துறை, குருத்துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள். நீங்கள் நல்லதைச் செய்ய சிலர் குறை சொல்லுவார்கள். அதற்காகத் தயங்காமல் நல்லதையே செய்யுங்கள். இறைவன் உங்கள் பக்கம் இருப்பார்.

★ அதிர்ஷ்ட நாள்:- திங்கள் (மத்தியானம்), புதன்.

## தனுசு

பேச்சுக்கவர்ச்சி மிக்கவர்கள் மக்களிடம் செல்வாக்குப் பெறுவார்கள் எனச் சொல்ல முடியாது மற்றவர்களின் குறை குற்றங்களை நெற்றிக்கு நேரே எடுத்துச் சொல்லி நீங்கள் குறைகேட்பீர்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக இருந்து இலாபகரமாக இயங்க முயலுங்கள். புதிய பாதை. புதிய திட்டம் என ஓடியாடித்திரிவீர்கள். செல்லப்பிராணிகளில் அதிக அன்பு காட்டுவீர்கள். தெய்வ வழிபாட்டால் அமைதியான வழியை நாடுவீர்கள் இடுப்புவலி, குடல் வருத்தங்கள், வயிற்றுநோ என்பன வரஇடமுண்டு வியாபாரத்துறை, ஆசிரியத்துறை, சட்டத்துறை, ஹோட்டல், பிரயாணம் போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்:- புதன்.

## மகரம்

திட்டமிட்டுக் கருமமாற்றினாலும் உங்களைப் பற்றி பலர் பலவிதமாகக் கதைத்தபடிதான் இருப்பார்கள். கதைப்பவர்கள் கதைக்கட்டுமே என அலட்சியமாக இருப்பீர்கள். அடுத்துக் கெடுப்பவர்களுடன் நட்பு வைத்தால் இறுதியில் திரிசங்கு சொர்க்க நிலைதான். தொழில் ஸ்தானத்தில் நல்ல அபிப்பிராயம் இருக்காது. எதிர்ப்புக்கள் வளர்ந்தபடி இருக்கும். எதிர்ப்பாலாரால் கருத்து வேற்றுமைகள் ஏற்படும் அரச அதிகாரிகளால் உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் புதிய வருமானங்கள் வர இடமுண்டு. தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சிகள் ஏற்படும். நரம்பு, தோல், சிரசு சம்பந்தமான வருத்தங்கள் வரும். உஷ்ணபீடைகள், அலைச்சலால் களைப்பு மேலிடும். ஓய்வு முக்கியமாகும். குருத்தொழில், மருந்துத்துறை, விவசாயத் துறை; பரிசோதனைத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- திங்கள் (மத்தியானம்)

## கும்பம்

பார்த்த ஒரு பார்வையிலேயே பிறரின் எண்ணம், செயற்பாடுகளை அறியும் ஆற்றல் இருந்தாலும் அதனை நன்மைகளுக்காக செயற்படுத்துபவர்கள்தான் சரித்திரம் படைத்துள்ளார்கள். நீங்களும் உங்கள் தொழில் ஸ்தானத்தில் பலரின் மனக்குறை அறிந்து நன்மைகள் செய்து, உண்மைகள் பேசிநயமடைவீர்கள். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டபடி இருக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தூரதேசச் செய்திகள் சிலருக்கு வரும் காசு பொருள் சிலருக்கு வரும். மூட்டுவலி, தொண்டை வரட்சி தோல் மூட்டு உளைவு, சிரசு வருத்தம் என்பன வரும். பாதுகாப்புத் துறை, ஆசிரியத்துறை, ரி.வி. இசைத்துறை, பண்ணைத் துறை. மருந்துத்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்கள் கொடுத்துக் கொண்டிருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:- திங்கள் மத்தியானம், வியாழன்.

## மீனம்

எத்தனை பொறுப்பு வந்தாலும் எதிர்கொண்டுவாழும் மனிதர்களை நாம் அடிக்கடி சந்திக்கின்றோம். அவர்களால் பலருக்கும் நன்மைகள், சிறப்புகள் கிடைக்கின்றதை எவரும் மறக்க மாட்டார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் உதவிகள், புதிய திட்டங்கள் தீட்டி இலாபங்கள் அடைய முயலுங்கள். மற்றவர்களுக்கு கெடுதிகள் செய்ய நினையாதீர்கள். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். நெடுந்தூரப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அல்லது இழப்பு அல்லது பொருள் தவறும் பலன்கள் ஏற்படலாம். சளித் தொல்லை, இடுப்பு வலி, கைகால் விறைப்பு, பிடிப்பு என்பன வர இடமுண்டு. நீதிந்துறை பாதுகாப்புத் துறை, கோவில் வேலைகள், வங்கித்துறை, எண்ணெய்த் துறை போன்றதுறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- திங்கள், மத்தியானம், வியாழன்.

# இணுவில் மத்திய கல்லூரியில் இலவச கணனிப் பயிற்சி

வலிகாமம் தெற்கு, ஒக். 22

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO) சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இணுவில் மத்தியகல்லூரி மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை. எங்கரசு தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண விழாவில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ. நல்லதம்பி செயலாளர் அ. பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கும் கணனி பற்றிய அறிவு இலவசமாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் தமது நிறுவனம் தனித்துவமாக நின்று செயற்பட்டு வருவதாகவும் கணனிப்பயிற்சி பெறுவதென்பது தமது பொருளாதார ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்ற அச்ச உணர்வை போக்கவும் தமது நிறுவனம் இது போன்ற செயற்பாட்டினை ஆரம்பித்து நடத்துவதாகவும் பயிற்சியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அ. நல்லதம்பி குறிப்பிட்டார்

கணனிப் பயிற்சிகள் தொடர்ந்து ஒன்பது நாள்களுக்கு வழங்கப்படும். அதன் பின்னர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை திங்கட்கிழமை வழங்கப்படும்.

மேலதிக பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

# படகு திருத்தம்

நெடுந்தீவு ஒக். 22

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் படகுப் புனரமைப்புப் பணிகள் தற்சமயம் இடம்பெற்றுவருகின்றன.

பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் படகில் கூடாரம் பொருத்தப்படவுள்ளது.

இதன் புனரமைப்புப் பணிகளுக்கு வடக்கு — கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் நிதியுதவி வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

(ஐ-111)

## தவறிவிட்டன

நேற்று மதியம் 11 மணியளவில் திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் மணிப்பேர்சுடன் ஒரு தொகை நகைகள் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள்:

செரக் தொலைத்தொடர்பு நிலையம்
79, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூரில் ஒப்படைக்கவும்.
சன்மானம் வழங்கப்படும்.

(79749) T.P. 2672

# மரண அறிவித்தல்கள்

## தர்சினி மாணிக்கவாசகர்

(கணனித்துறை இறுதியாண்டு மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்)

தர்சினி மாணிக்கவாசகர் 20—10—2000 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அ. மாணிக்கவாசகர்
அதிபர், (தகப்பன்)
யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை,
பருத்தித்துறை. (சி/13533)

## முத்துவேலு புலேந்திரன்

(மாமா)

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம் புதுவீதியை வதிவிடமாகவும் கொண்ட முத்துவேலு புலேந்திரன் நேற்று (21-10-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்துவேலு சரஸ்வதியின் அன்புமகனும் காலஞ்சென்ற கனகசபை சின்னம்மாவின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பொன்னுத்துரை (நெடுங்கேணி), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும், புவனேந்திரன், (கனடா), மங்கையர்க்கரசி(கொழும்பு), அம்பிகாவதி (கொழும்பு), சபாரத்தினம், கனகசபை ஆகியோரின் மைத்துனரும், நல்லதம்பியின் சகலனும் அனுஷியா (ஜேர்மனி), அன்ரனியா (பிரான்ஸ்), கௌசலியா, தனுதாஸ், பிரசாத் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நியூட்டன் (ஜேர்மனி), இன்பகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், றொனால்ட், ஆகாஷ் (ஜேர்மனி), அபினன், விதுஷா, விதுஷிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(22-10-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்
தி. ஜெகநாதன் (சிறி)
(மருமகன்)
(விநாயகர் பென்சி)
பொன்னையா வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (79742)

## திருமதி ஐயாத்துரை மகேஸ்வரி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம், நீராவியடியில் வசித்தவருமாகிய திருமதி ஐயாத்துரை மகேஸ்வரி 21—10—2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை (பிரபல வர்த்தகர், பாணந்துறை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா—காமாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை—அமிர்தம் தம்பதிகளின் மருமகளும் மகேந்திரலக்சுமி (நீர்கொழும்பு), புஸ்பராணி, தனலக்சுமி (கிளிநொச்சி), தனபாக்கியலக்சுமி (வவுனியா), கோமளாதேவி (கனடா), செல்வராணி (ஆசிரியை, புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாசாலை), சத்தியபாமா (ஆசிரியை, புங்குடுதீவு கணேச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் இலகநாதன் (ரஞ்சனாஸ், நீர்கொழும்பு), திருலோகநாதன் (ஸ்ரீ சக்தி வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்), பவாசண்முகம் (சரவணாஸ், கிளிநொச்சி), சோமசுந்தரம் (சுஜீராஸ், வவுனியா), சிவபாலன் (கனடா), தனபாலசிங்கம் (கிராம அலுவலர், புங்குடுதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரபாகரன் கனடா), பிரபாகினி—தயாபரன் (கனடா), சுபாகினி (முகாமைத்துவ வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்), தனரூபன் (U.K.), ரூபிகா, திருச்செந்தூரன் (ஆஸ்திரேலியா), சஞ்சீவன் (பொறியியல் பீடம், பேராதனை), யசோஜினி (வேம்படி மகளிர் கல்லூரி), நேமேந்திரா, நிதர்சினி, கோபிநாத், நித்தியாசினி, மயூராசினி, மனோஜினி, சுகிர்தன், சுஜித்திரா, சுஜீவன், சுஜீரா, வினுபா, ஜெனுஷா, ஜெய்ஷன், தக்ஷபன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-10-2000 முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. திருலோகநாதன்
ஸ்ரீசக்தி வர்த்தக நிலையம்,
யாழ்ப்பாணம்.
39, மணிக்கூட்டு ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம். (79743)

## மழையில் நனைந்த ஆவணங்கள்

தென்மராட்சி, ஒக்.22

சாவகச்சேரி அஞ்சல் அலுவலக கட்டடத்தின் கூரைப் பகுதி பலத்த சேதமடைந்துள்ளதால் அலுவலகம் முழுவதும் மழைவெள்ளத்தில் காணப்படுகிறது. அஞ்சல் அலுவலகத்தில் கைவிட்டு வந்த முத்திரைகள், வான் அஞ்சல் கடித உறைகள் ஆகியவை காணாமற் போய் உள்ளன அலுவலகத்தில் இருந்த அலுமாரிகள், மேசைகள் உடைக்கப்பட்டு ஆவணங்கள் வெளியே வீசப்பட்டிருந்தன அவை நனைந்த நிலையில் மீட்கப்பட்டன.

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அ சிவஞானசுந்தரம் சாவகச்சேரி அஞ்சல் அதிபர் ஆகியோர் சாவகச்சேரிக்குச் சென்று அஞ்சல் அலுவலகத்திலிருந்து ஆவணங்களை மீட்டு வந்தனர்.

நனைந்த நிலையில் கொண்டுவரப்பட்ட பதிவேடுகள் காயவிடப்பட்டு காணப்பட்டன.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தை அண்டிய பகுதியிலிருந்த வீடுகள் ஷெல் வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது (இ-117)

## இன்று போலியோ சொட்டு மருந்து

நெல்லியடி, ஒக். 22

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு வடமராட்சிப் பகுதியில், இன்று 38 சிகிச்சை நிலையங்களில் வைத்து போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

சோளங்கன் சனசமூக நிலையம், மணியகாரன் தோட்டம் பாடசாலை, மந்திகை மருத்துவமனை, வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் பணிமனை, திக்கம் சிகிச்சை நிலையம், அல்வாய் கிராமசபை அலுவலகம், அத்தாய் விநாயகர் பாலர் பாடசாலை, வியாபாரிமூலை சிகிச்சை நிலையம், சென் அன்ரனி சிகிச்சை நிலையம்; மாதனை மாதர் சங்கம், கற்கோவளம் சிகிச்சை நிலையம், தம்பசெட்டி கதிரவேல் பிள்ளை சனசமூக நிலையம், ஆத்தியடி மத்திய மருந்தகம், விக்னேஸ்வரா சிகிச்சை நிலையம், வதிரி சிகிச்சை நிலையம், கப்புது சனசமூக நிலையம், கரவெட்டி மத்திய மருந்தகம், இராஜகிராமம் சனசமூக நிலையம், கிழவி தோட்டம் சனசமூக நிலையம், கட்டைவேலி சனசமூக நிலையம், கோயில் கடவை சனசமூக நிலையம், அம்பிகை பாலர் பாடசாலை, வளர்மதி பாலர் பாடசாலை, உடுப்பிட்டி சனசமூக நிலையம், பாரதி சனசமூக நிலையம், இலகடி சனசமூக நிலையம், இமையாணன் மாதர் சங்கம், கலைமகள் பாலர் பாடசாலை, உடுப்பிட்டி பிரதேச சபை, ஆதி கோயிலடி சனசமூக நிலையம், வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனை, கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை, இந்து த.க.பாடசாலை, பொலிகண்டி இ.த.க. பாடசாலை, வல்வெட்டி இ.த.க பாடசாலை, அம்பன் அ.மி.த.க. பாடசாலை, மணற்காடு பாலர் பாடசாலை, குடத்தனை சிகிச்சை நிலையம் ஆகிய வையே இந்த 38 சிகிச்சை நிலையங்களுமாகும்.

மேற் குறித்த சிகிச்சை நிலையங்களுக்கு அருகில் வசிப்போர் 5 வயதுக்கு உட்பட்ட தமது பிள்ளைகளுக்கு உரிய போலியோ சொட்டு மருந்தைத் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொறுப்பதிகாரி வி. செல்வரட்ணம் கோரியுள்ளார். (இ-109)

## பட்டமளிப்பும் பாராட்டு விழாவும்

மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலைய
ஆத்மீக
அருள் மார்க்கண்டு சுவாமிகளின்
73ஆவது
ஜெயந்தி தின விழா

24-10-2000 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.
பகல் 10.00 மணியளவில் பிளவத்தை கற்பகப் பிள்ளையார் கோயிலடி(வட்டு.வடக்கு, சித்தன்கேணி)

தவில் வித்துவான்
திரு. K. N. ராமநாதன் குழுவினரை
சுவாமிகள் வாழ்த்தி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வும் அத்துடன்
K. N. ராமநாதனின் புதல்வனுமாகிய
N R. தர்ஷன் அவர்களுக்கு
அவரது தவில் திறனைப் பாராட்டி சுவாமிகளினால்
'தவில் இளவரசன்'
என்னும் பட்டமும் வழங்கி, தங்கப்பதக்கமும் சூட்டி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படும் நிகழ்வும் அத்துடன் நாவலடி ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த
கலாபூஷணம் எஸ். நடராஜா
(கலை ஆசிரியர், எஸ். என். ஆர்.)
அவர்களுக்கு சுவாமிகளினால்
'ஓவியக் கலை வித்தகர்'
என்னும் பட்டமும் வழங்கி பொன்னாடையும்போர்த்தி கௌரவிக்கப்படும் நிகழ்வும் இடம்பெறும்.

எனவே, இந்த விழாவிலே பெரியோர்களையும் தவில் வித்துவான்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

ஸ்ரீ முருகன் அருள் நிலைய
அடியார்கள்
மார்க்கண்டேயர் வீதி,
லோட்டன் றோட்,
மானிப்பாய். (79755)


வாடிக்கையாளரின் நன்மை கருதி
மீண்டும் ஒரு தடவை
லிங்கம் சில்க் ஹவுஸ்
வழங்கும்

## மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| 4 சாறிகள் | ரூபா 960/- |
| சைனா ரவல் | ரூபா 160/- |
| மாட்டின் சேட் (பெரியது) | ரூபா 200/- |
| மாட்டின் சேட் (சிறியது) | ரூபா 160/- |
| சேட்டிங் 1 மீற். | ரூபா 90/- |
| செக் துணி 1 மீற். | ரூபா 75/- |
| 1 வைன்ந் சூட்டிங் (இம்போட்டற்) | ரூபா 200/- |
| 6 யார் ஸ்கேட் (இம்போட்டற்) | ரூபா 275/- |

சிறுவர் ஆடைகள், வேட்டி, காற்சட்டை, வெள்ளைச்சாரம், ரங்குலர் துணி, சேட் வகைகள் இன்னும் பல,

சொற்ப கையிருப்பே உண்டு.
தேவைகளுக்கு முந்துங்கள்.

லிங்கம் சில்க் ஹவுஸ்
இல, 23, நவீன சந்தை,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
(சி/13535)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன விஞ்ஞான ஆசிரியர்
திரு.தேவா
அவர்களின் புதல்வன்
கௌசிகன்

அவர்களின் 20 - 10 - 2000 மரணச் செய்தி கேட்டு துயரடைந்தோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

விக்னா கல்வி நிறுவனம்.
நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(79745)

# இந்த நேரத்திலாவது.....!

இலங்கைத் தமிழர்களான எமது பாரம்பரியத் தாயகம், வடக்கு, கிழக்கு மாகாணங்கள். நாம் எங்கிருந்தோ இங்கு வந்தவர்களல்லர்; தொன்று தொட்டே இங்கு வாழ்ந்து வருபவர்கள். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இங்கேதான்; அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இங்கேதான்.

இந்தப் பிரதேசத்தில் - நமது சொந்தப் பிரதேசத்தில் நமக்கேயுரிய பண்பாடு, கலாசாரத்துடன் நமது தனித்தன்மையைப் பேணிக்கொண்டு -

சொல்லளவில் மட்டும் தமிழர்கள் என்றிராமல், செயற்பாட்டிலும் பண்பட்ட தமிழர்களாக -

யாருக்கும் அடிமை செய்யாமல் அதே வேளையில் யாரையும் அடிமை கொள்ளாமல் -

வாழவேண்டும்; நமது பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் என நமது சந்ததியினரும் அப்படியே வாழவேண்டும் என்பதே நமது விருப்பம்; எதிர்பார்ப்பு; இலட்சியம்!

நமது தாயகத்தில் நம்மை நாமே ஆளும் உரிமை இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்!

எத்தனை சிரமங்கள், சிக்கல்கள் இடை நின்றாலும், துன்ப துயரங்கள் தொடர்ந்து வந்தாலும், அத்தனையையும் துச்சமென மதித்து, நமது இலட்சியத்தை மீண்டும் மீண்டும் விளக்கிக் கூறவும் வெற்றியை நோக்கி வீறுநடை போடவும் நாம் என்றுமே சித்தமாயுள்ளோம்.

எமது இந்த நிலைப்பாட்டை ஊருக்கும் உலகிற்கும், அயலவர்க்கும் அன்னியர்க்கும் அழுத்தந் திருத்தமாக ஆணித்தரமாக - ஐயந் திரிபிற்கிடமின்றி அடித்துச் சொல்லும் சந்தர்ப்பமொன்று வந்தது; தேர்தல என்ற பெயரிலே எம்மைத் தேடிக்கொண்டு வந்தது!

கூடவே, வேட்பாளர் என்ற பெயரிலும் பலர் எம்மைத் தேடிக்கொண்டு வந்தார்கள்!

போரை நிறுத்துவோம்; புலிகளுடன் அரசைப்பேச வைப்போம்; மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் நாட்டிலே நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவோம்; உரிமைகளைப் பெற்றுத் தருவோம்; எம்மை நாமே ஆள வைப்பதன் மூலம், எல்லோரையும் நன்றாய் வாழவைப்போம்!

பல்வேறு சொற்களில் - வெவ்வேறு தொனிகளில் அமைந்திருந்தாலும், வந்த ஒவ்வொருவரும் இவற்றைத்தான் சொன்னார்கள்; மீண்டும் மீண்டும் சொன்னார்கள்!

ஒரே விஷயங்களைச் சொல்கின்ற உங்கள் மத்தியில் போட்டி ஏன்? பகைமை ஏன்?

என்று கேட்டோம் தமிழ் மக்களாகிய நாம்.

தேர்தலைத் தவிருங்கள்; வீண் செலவுகளையும் விதண்டா வாதங்களையும் தவிர்த்து ஒரே அணியிலே திரளுங்கள்; ஒரே குரலிற் பேசுங்கள் - என்று சொன்னோம். தமிழ் மக்களாகிய நாம்.

பெரும்பான்மை மக்களிடையே பிளவுகள் இருந்தாலும், அந்த இனம் பெருமளவிற் பாதிப்பிற்குள்ளாகாது: ஆனால் சிறுபான்மை இனத்திற்குள் பிளவுகளும் பிரிவுகளும், பகைமையும் போட்டியும் இருந்தால் அந்த இனம் சிதைந்து சின்னாபின்னமாகிவிடும; அந்த இனத்தைக் காப்பாற்றுவதற்கு இறைவனாலுமே முடியாது போய்விடும் - என் எச்சரித்தோம்!

ஈழத் தமிழினம் ஒன்று சேர்ந்துவிட்டது; அதன் கோரிக்கைகளை இனியும் உதாசினம் செய்ய முடியாது என்ற உண்மை சிங்களத தலைவர்களின் உள்ளங்களிலும் உலக நடுநிலையாளர்களின் எண்ணங்களிலும் ஊன்றிப் பதியும்படி நீங்கள் ஒன்றுபட்டால் எங்கள் இலட்சியம் விரைவிலே வெற்றி அடைவது நிச்சயம் - என்றும் சொல்லிப் பார்த்தோம்!

நாம் சொன்னவற்றைக் கேட்டவர்கள், தாம் கேட்டவற்றைச் செய்யவில்லை!

தேர்தல் நடந்தது; வெறுப்பும் விரக்தியும் கொண்டு வீட்டிற்குள்ளே அடைந்து கிடந்த எண்ணற்ற வாக்காளர்களைத் தன்னிடம் இழுக்கும் கவர்ச்சியோ வல்லமையோ இன்றி அது முடிந்தும் விட்டது!

தேர்தல் முடிவுகள், நம்மவர் பலரின் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் அவநம்பிக்கையையும் அதிகரித்திருப்பதைத் தவிர வேறு எந்தச் 'சாதனை' யையும் செய்யவில்லை!

## மணிமண்டபம்

நமது தாயகப் பிரதேசமான திருகோணமலையில் நமது பிரதிநிதித்துவத்தை இழந்துவிட்டோம்!

இன்னொரு பிரதேசமான மட்டக்களப்பில் அதை நாம் குறைத்துக் கொண்டோம்!

குடாநாட்டு வாக்களிப்புத் தில்லுமுல்லுகளாய் உலகின் பார்வையில் எமக்குத் தலைக்குனிவை ஏற்படுத்திக்கொண்டோம்.

ஆட்சி அமைப்பது தொடர்பாக, எம்மை விடச் சிறுபான்மையினரான முஸ்லிம் மக்கள், தம் ஒற்றுமை காரணமாக, பெரும்பான்மைக் கட்சியினருக்கு விதித்துள்ள பல நிபந்தனைகளில் ஒன்றைத்தானும் விதிக்க முடியாத அளவுக்கு வக்கற்று நிற்கின்றோம்!

நடந்தது நடந்துவிட்டது, போகட்டும்.

இரு பெரும் பேரினவாதக் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தித் "தேசிய அரசாங்கம்" ஒன்றை உருவாக்குவதற்கு உள் நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள சக்திவாய்ந்த சில அமைப்புக்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ள இந்த நேரத்திலாவது -

நமது தலைவர்களிடையே ஒற்றுமை ஏற்பட மாட்டாதா? அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதை நினைத்தாவது எமது பிரதிநிதிகள் ஓரணியில் நின்று எமது உரிமைகளைப் பெற்றுத் தரமாட்டார்களா?

*— சித்தன்*

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.22

சங்கீத கலா வித்தகர் எஸ்.சிவானந்தராஜா எழுதிய 'இலக்கிய இசைச்சாரல்' என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடஇலங்கை சங்கீத சபையின் ஆதரவில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு அதன் தலைவரும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருமான திருமதி எஸ்.மகாலிங்கம் தலைமை வகிப்பார்.

இந்த நிகழ்வுகளில் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். மகாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் ஆசியுரையையும், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராஜா நூல் வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் நூல் ஆய்வுரையையும் நிகழ்த்துவர்.

(ஐ-7-28)

## முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

அம்பாறை,ஒக்.22

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடியில் நேற்றுமுன்தினம் முஸ்லிம்கள் திரண்டு இஸ்ரேலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கல்முனைக் குடி ஜும்மா பள்ளி வாசல் முன்பாக இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.

(ஐ-14)

# முகாமைத்துவத்தின் நுட்பங்களை இலக்கிய ரசனையுடன் தருகின்ற நூல்

இந்நூல் அதிபர்களுக்கான முகாமைத்துவம் தொடர்பான நூலாக இருந்தாலும் கல்விசார் சமூகத்தினர் அனைவரும் பயன்படுத்தி பயனடையக்கூடிய ஒரு நூலாக இருப்பது இதன் தனித்துவமாகும்.

இந்நூல் தொடர்பாக வெளிப்படுகின்ற சிறப்பு அம்சங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. முகாமைத்துவம் தொடர்பான அடிப்படையானதும், தற்காலம சார்ந்ததுமான அம்சங்கள் இடம்பெறுகின்ற அதேவேளை நூலின் ஆசிரியர் ஓர் எழுத்தாளன் என்ற காரணத்தால் தேவையான இடங்களில் இலக்கியரசனை சேர்க்கப்பட்டு வாசிப்பவர்களின் ஆவலைத் தூண்டும் விதத்தில் ஆக்கப்பட்டுள்ளது.

2. எமது பிரதேசம் சார்ந்த கடந்தகால கல்விசார் உணர்வுகள் பலவற்றை நாம் இந்நூலின் வாயிலாக மீட்டு நிகழ்கால நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் பல இடம்பெற்றுள்ளன.

3. கோட்பாட்டு ரீதியான கருத்துக்கள் இடம்பெறுகின்ற அதே வேளை உண்மைச் சம்பவங்களை அவற்றிற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டி உயிரோட்டமுள்ள நூலாக இடம்பெற்றுள்ளது.

4. அதிபர்களாக செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு நல்லவழி காட்டியாக அமைந்துள்ளது. எவற்றை செய்யவேண்டும் என்பதுமட்டுமல்ல எவற்றைச் செய்யக்கூடாது என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

### நூல் வரிசை

5. நிறுவனம் சார்ந்தவர்கள் மட்டுமன்றி தனிப்பட்டவர்கள் கூட முகாமைத்துவம் சார்ந்த யதார்த்த நிலைமைகளை அறிந்துகொள்வதற்கு உதவும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது.

6. இந்நூலின் ஆசிரியர் ஓர் எழுத்தாளராக இருப்பதால் கூர்மையாக அவதானித்துப் பெற்ற பல கல்விசார் சம்பவங்கள் இந்நூலின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### ஆசிரியர் தொடர்பாக

கல்வித் துறையில் வித்தியாசமான பாத்திரப் படைப்பையும், தனித்துவமான நடிபங்கையும் கொண்ட அதிபர் என்ற ஸ்தானத்தில் இரண்டு தசாப்தங்களாகச் செயற்பட்ட 'பட்டறிவை' தன்னகத்தே கொண்டவர்.

நல்லஆசிரியருக்குரிய பண்புகள் பலவற்றைக் கொண்டிருந்ததினால் அவருடை மாணாக்கரால் இன்றும் நல்லாசிரியராகப் போற்றப்படுபவர்.


சமகால உண்மைச் சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டு பல ஆக்கங்களை முக்கியமாக சிறுகதைகளை இலக்கிய உலகிற்கு வழங்கி வருபவர்.

தற்பொழுது திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தாலும் கல்விசார் உலகில் சகல மட்டத்தினாலும் மதிக்கப்படும் ஒருவராகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே இந்நூல் திருகோணமலையில் உள்ளவர்களின் கைகளில தவழ்ந்துகொண்டிருக்கின்றது. நூலை எமதுபகுதி மக்களும் பயன்படுத்தவேண்டும் என்பதற்காக நூல் தொடர்பான அறிமுக விழா நாளை திங்கட்கிழமை உடுப்பிட்டி அ.மி.கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

**நூலின் பெயர் :- முகாமைத்துவ நுட்பங்கள்**
**ஆசிரியர் :- வல்வை திரு.ந.அனந்தராஜ்**

த. அரியரத்தினம்
*அதிபர்*



**ஓய்வுபெற்ற பிரதேசசெயலர் கா.சந்திரராசாவுக்கு வலி.மேற்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் அண்மையில் நடத்திய பிரிவுபசாரத்தின்போது எடுக்கப்பட்ட படம் இது.**

**வலி.மேற்கு பிரதேச சபை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தின்போது பதில் பிரதேச செயலர் திரு.வேதநாயகன் திரு.சந்திரராசாவுக்கு மாலை அணிவதை படத்தில் காணலாம்.**

*(படம்: மூளாய் செய்தியாளர்)*

# இன்று அகவொளியில் குடும்ப தின விழா

**யாழ்.அகவொளி அமைப்பினரால் இன்று குடும்பதின விழா கொண்டாடப்படுகிறது. அதனை ஒட்டிய சிறு குறிப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

யாழ்.கத்தோலிக்க திருச்சபை 'அகவொளி' குடும்பவள நிலையத்தின் ஊடாகச சிறந்த குடும்பங்களை உருவாக்கி நிறை வளத்தோடு வாழப் பல செயற்பாடுகளை மறை மாவட்ட, மறைக்கோட்ட, பங்கு ரீதியாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவற்றின் சில செயற்பாடுகளாக:-

திருமண ஆயத்தப்பயிற்சி நெறி, திருமணவாழ்வை நிறைவளமாக்கும் நெறி, குடும்ப ஆற்றுப் படுத்தல், போயா நாள் கருத்தரங்கு, விதவைகளுக்கான ஆற்றுப் படுத்தல், இயற்கைமுறைக் குடும்பநலத் திட்டம், திருமணத் தகவல் தொடர்பு, கிறிஸ்தவ குடும்ப இயக்கம், குடும்பதினம் போன்றவை அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் 20ஆம் திகதி குடும்ப தினமாகக் கொண்டாடப்படும். 20ஆம் திகதிக்கு முன்வரும் வாரம் முழுவதுமே குடும்ப வாரமாக அனுஷ்டிக்கப்படும்.

இம்முறை சூழ்நிலைகளின் காரணமாகப் பிற்போடப்பட்ட இவ்விழா இன்று (22-10-2000) "அகவொளி" நிலையத்தில விமரிசையாகக கொண்டாடப்படுகின்றது.

கிறிஸ்தவ குடும்ப விழுமியங்களைச் சகல மட்டத்தினரிடையேயும் பரப்பி ஊக்குவிக்குவிக்கும் முகமாகக் கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, விமர்சனம், கேள்வி-பதில், சித்திரம் போன்ற போட்டிகள் சகல மட்டத்தினரிடையும் நடத்தப்பட்டு பரிசில்களும் இன்று வழங்கப்படுகின்றன.

'குடும்பம் ஒரு கோவில்'; 'குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்'; 'குடும்பம் சமூகத்தின் ஆணிவேர்' என்பன போன்ற அனுபவ மொழிகள் குடும்பத்தைப் பற்றிய சமூகத்தின் கணிப்பை நமக்கு நன்குணர்த்துகின்றன. ஏனெனில் குடும்பம உயர்ந்தால் நாடு உயரும்; குடும்பம் கெட்டால் நாடு தாழ்வுறும். ஆக்கமும் அழிவும் குடும்ப வாழ்க்கையில் அமையும்.

முழு வேதாகமத்தையும் எடுத்து அதில் கூறப்பட்டவைகளை ஒரு சொல்லில அடக்குவோமாயின 'அன்பு' என்பதே இரத்தினச் சுருக்கமாகும். இதனாலேயே அன்பே கடவுள் என்கிறோம். இதனையே அனைத்து மதங்களும் அடிநாதமாகக் கொண்டுள்ளன. இவ்வுலகின் சகல இயக்கங்களுக்கும அன்புதான் அடிப்படை. இதனை விஞ்ஞான உண்மைகளும் உறுதி செய்கின்றன.

மனித வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அன்பே மூலதாரமாக விளங்குகின்றது. இதனைக் குடும்பம் வழங்குகின்றது. அன்புள்ள குடும்பம் அன்புள்ளங்களைப் படைக்கும். அன்புள்ளங்கள் மனிதத்தையும், மனிதநேயமுள்ள நாட்டையும், உலகையும் உருவாக்கும். அன்பு நிறைந்த செயல்கள் ஒவ்வொன்றும சமாதானத்தின் வடிவங்களே.

வன்பு அன்புக்கு எதிரானது. ஆக்கத்திற்கு அன்பு என்றால் அழிவுக்கு வன்பாகும். இன்று உலகின் அழிவுக்கு குடும்பங்களில் வன் செயல்களின் வளர்ச்சி மிகுந்து காணப்படுவதே காரணமாகும். எதிர்கால உலகின் நம்பிக்கை புதிய கண்டுபிடிப்புக்களால் அன்று; மாறாக மேலான மனித உறவுகளிலேயே அடங்கியுள்ளது. இதனாலேயே எமது தாய்த் திருச்சபை கிறிஸ்தவ விழுமியங்களைப் பேணி வளர்க்கும் அன்புள்ள குடும்பங்களை வளர்த்தெடுப்பதில மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

அன்பைப் பலர் பிழையாக எண்ணிக் கொள்வதுண்டு. அறம் என்பது உள்ளத்தின் மாசற்ற தன்மையே. நீதி, நியாயம், நேர்மை, சத்தியம், கருணை என்பவற்றை விட்டுச் செய்யும், விற்றுச் செய்யும் அன்பு தூய்மையற்ற மனத்தின செயற்பாடுகளே. இதனையே அறிவின் இமயமான வள்ளுவரும்:

'மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற' என்றார்.

வாழ்க்கையில் துன்பம் சகடக்கால். இன்ப துன்பம் மாறிமாறி வந்துற்ற போதும் உயர் விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் நல்ல குடும்பங்களைக் கட்டியெழுப்புவோமாகில் அது எல்லோராலும் ஈர்க்கப்படும். நாட்டில் சமாதானம் நர்த்தனமிடும்; மகிழ்ச்சி பொங்கும்.

ஆகவே இந்த நன்னாளில் 'நம் குடும்பம் ஒவ்வொன்றும் ஒரு குட்டித் திருச்சபை' என்பதனை உணர்ந்து செயல்பட நாம் உறுதி பூணுவோம்.

செயலாளர்,
*கிறிஸ்தவ குடும்ப இயக்கம்*

### செய்முறைப் பரீட்சை நேர அட்டவணை

சாவகச்சேரி றிபேக் கல்லூரியின் தரம் 11 மாணவர்களுக்கான சங்கீதம், நடனம், விவசாயம், மனையியல், உடற்கல்வி பாடங்களுக்கான செயன்முறை மதிப்பீட்டுக்கான நேர அட்டவணைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அதிபர் எம்.நாகேந்திரராஜா தெரிவித்தார். (ஐ-9)

## பரிசளிப்பு விழா

யாழப்பாணம்,ஒக்.22

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொள்வார்.

(ஐ-7)

★ ★ ★

சுழிபுரம்,ஒக்.22

காட்டுப்புலம் அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் கல்விவலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். புதிய கட்டடத்தை அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரி ஆங்கிஸ்வைற் திறந்து வைப்பார். (ஐ-7-28)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறையினரால் நடத்தப்படும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 25ஆம்திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபம்-2 இல் இடம்பெறும்.

(ஐ-9)



பாரதி விழாவில் பட்டி மண்டபத்தில் தங்கள் வாதத்திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களையும் வில்லிசைக் குழுவினரையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணக் கல்லூரி 'பாரதி விழா'

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் வருடாந்தம் நடைபெற்றுவரும் பாரதிவிழா அண்மையில் சிறப்பாக இடம் பெற்றது. அந்த விழா தொடர்பான தொகுப்பு இது.**

1982 செப்ரெம்பரில் தொடங்கிய மகாகவி பாரதிவிழா, யாழ்ப்பாணக் கல்லூரியின தவிர்க்கமுடியாத பெருவிழாவாகிவிட்டது. பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்களே இவ்விழாவின் ஆதாரசுருதி! தொடர்ந்து ஒவ்வொரு விழாவிலும் பங்குபற்றிச்சிறப்பித்துவந்த பேராயர், இந்தப் புத்தாயிரமாவது பாரதிப் பெருவிழாவிற்குப் பங்குபற்ற முடியாமற் போய்விட்டது.

பிறந்திருக்கும் இருப்பத்தோராம் நூற்றாண்டின் அதிசிறப்புக்குரிய விழாவாக அமைந்துவிட்ட 'பாரதி விழா'விலே, 'பட்டிமண்டபம்;' 'வில்லிசை விருந்து', 'இசைநாட்டியம்' ஆகிய மூன்று சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. யாழ்ப்பாணக்கல்லூரியின பாரம்பரியத 'தனித்துவம் மிக்க 'ஒட்லி' மண்டபம்' ஆசிரியர் பிரான்சிஸ் சந்திரகுமார் மற்றும் மாணவர்களின் கைவண்ணத் திறத்தாலே அலங்காரக் கலைமண்டபமாக விளங்க; கல்லூரி முதல்வர் வண. ஏ.ஏ.போல், துணைமுதல்வர் திரு. நோயல் விமலேந்திரன், யாழ்ப்பாணப்பல்கலைக கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சிவலிங்கராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றி, பாரதியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலைகளைச் சூட்டினர்.

விழாத தலைமை வகித்த கல்லூரி தமிழ் மன்றத்தலைவர் செல்வன த. தவச்செல்வன் அன்புடன் அழைக்க, ஆசியுரை வழங்கினார கல்லூரி முதல்வர். அவரைத் தொடர்ந்து கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா வாழ்த்துரையை நிகழ்த்தினார். அடுத்து த.தவச்செல்வனின் தலைமையுரை இடம்பெற்றது.

சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கியதுமே சபை களை கட்டியது. அதிலும் 'வில்லிசை விருந்து', தமிழ விரிவுரையாளர் பொ.அருந்தவநாதன் பரிவாரங்களின் படையலினால் நேர காலம் மறந்து, பசி மறந்து, சபையோரை ரசனைக்கடலினுள் ஆழ்த்தியது. 'பாரதியின் - பாஞ்சாலி சபதம்' எனும் தலைப்பில் நிகழ்ந்த இவ் வில்லிசை விருந்தே 'மகாகவி பாரதிவிழா-2000' இன் உச்ச நிகழ்ச்சி எனலாம்.

அடுத்ததாக, விரிவுரையாளர் அ. குமாரவேல் நடுவர் பொறுப்பேற்ற 'பட்டிமண்டபம்', சபையிலிருந்த சுவைஞர்களுக்கு 'மொழிவிருந்து' படைத்த நிகழ்ச்சியாகும். 'பாரதியின் படைப்புக்களிலே பெரிதும் விஞ்சி நிற்பது நாட்டுப்பற்றா? மொழிப்பற்றா?' என்கிற தலைப்பில் நடைபெற்ற இப் பட்டிமண்டபத்தின் ஈரணிகளுக்கும் தலைமை தாங்கிய யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர்களாகிய துணவியூர்க் கேசவனும், ந.குகபரனும் தத்தம் வாதத்திறனை வெளிப்படுத்தினர். இப் பட்டிமண்டபத் தலைப்பு சமநிலைப்பட்டதல்ல. ஏனெனில், பாரதி என்றாலே நாட்டுப் பற்றுத்தான் என்பது பேருண்மை. அப்படியிருக்கவும், 'மொழிப்பற்று' என்கிற மிகப பலவீனமான அணியிலே வாதாடிய ந.குகபரன் அணியினர் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள். அவரது அணியிலே மிகச் சிறப்பாக வாதாடிய யாழ்ப்பாணக் கல்லூரியின் இளந்தளிர் கனக.சுகாஷ் வருங்காலப் பேச்சாளர் பட்டியலில் நிச்சயம் இடம் பெறுவார்.

மற்றும் நாட்டுப்பற்றாளர் அணியிலே வாதாடிய துணவியூர்க் கேசவன் தனது அனுபவத்திறனை நன்கு வெளிப்படுத்தினார். அவரின் கீழ் பேசிய த.தவச்செல்வன் வளர்ந்து வரும் சிறந்த தமிழ்ப் பேச்சாளன். செல்வி மதுராவும் வருங்காலத்தில் சாதிக்கக் கூடியவரே.

மொழிப்பற்றாளர் அணியிலே வாதாடிய வேந்தக்குமார் தன் தரப்பு வெல்லவேண்டுமே என்கிற ஆவேசத்துடன் கருத்துக்களை வழங்கினார். நடுவரின் தீர்ப்பு யாவரும் எதிர்பார்த்தது போலவே வழங்கப்பட்டது. யாழ்ப்பாணக்கல்லூரி மாணவிகளின் 'இசை நாட்டியம்,' அவர்களின் ஆடும் ஆற்றலுக்கேற்றவாறு அமைந்தது. ஆர்வம் இருக்கிற அளவுக்கு ஆற்றலையும் வளர்த்துக் கொள்வார்களேயானால், எதிர்கால நாட்டியக் கலாமணிகளாகலாம். செல்வி மு. சங்கீதாவின் நன்றியுரையுடன் நிறைவெய்திய 'மகாகவி பாரதிவிழா 2000.' கூட்டிக்கழித்துப் பார்க்கையில் சுவை மிகுந்த நல்லதொரு பெரு விழாவாகவே அமைந்தது.

## அறிமுகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால யாழ். கல்வி வலயத்தில் நடத்தப்பட்டு வரும் முதன்மை நிலை I கணித வள நூல் அறிமுகப் பயிற்சி வகுப்பில் இன்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அல்லது கோட்டக் கல்வி அலுவலர்கள் அல்லது கல்வி முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மானச சஞ்சாரம்

உலக உளநல நாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானச சஞ்சார நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதில்வாழ்த்துப்பா, நடனம், நாடகம், கருத்துரை, இசைநிகழ்ச்சி, ஓராளரங்கு என்பன இடம் பெறவுள்ளன. (ஐ-9)

**BIO TEC**

பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

இரத்தம், சிறுநீர்
பரிசோதனைகள்
காலை 9 - 12

சிறந்த காஸ் ஊட்டிய
அமெரிக்க
எஸ்சென்சுடன்
தயாரித்த

ORANGE - ஒறேஞ்
NECTA - நெக்ரா
GINGER BEER - இஞ்சி சோடா
CHAMP COLA - சம்ப் கோலா
SODA - உப்புச் சோடா

2D COLA - 2D கோலா
மெலிவதற்கு
DIET. DIABETIC -
சக்கரை
வியாதிக்கும்
கொலெஸ்ரோல்
குறைவதற்கும்.

(79618)

## தற்கொலைக் குண்டுதாரியின் செலுலர் தொலைபேசி மீட்பு

கொழும்பு,ஒக்.22

கொழும்பு விகாரமகாதேவி பூங்கா முன்பாக வியாழக்கிழமை காலை விடுதலைப புலி தற்கொலை குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்த சம்பவம் குறித்து சி.டி.பி. பொலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டிருப்பதாக சி.டி.பி. பொலீஸ் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சருமான பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து இதுவரை 50க்கும் மேற்பட்டவர்களிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அப்பகுதியில் இருந்து கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

குண்டுதாரியும், அவருடன் வந்த இளைஞனும் தனியார் பஸ் ஒன்றில் வந்து இறங்கியதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. எந்த பஸ்ஸில் வந்தார்கள் என்பது கண்டறியப்படவில்லை.

நேரில் கண்ட சிலர் இவர்கள் பற்றிய விவரங்களைக் கொடுக்கத் தயக்கம் தெரிவிப்பதாகவும் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க தற்கொலைக் குண்டுதாரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட செலுலர் தொலைபேசி தற்கொலைக் குண்டுதாரி யார், அவருடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் யார் என்பதைக் கண்டறிய உதவலாம் என நம்பப்படுகிறது. இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பொலீஸார் குறிப்பிட்ட செலுலர் நிறுவனத்தினரின் உதவியை நாடி விவரங்களைச் சேகரித்து வருகின்றனர். (ஐ)

## நல்லூர் பிரதேச செயலக பிரிவில்

## 505 குடும்பங்களுக்கு நாளை கொடுப்பனவு

வலி. வடக்கு, ஒக்.22

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெற மேலும் 505 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இம்முறை தென்மராட்சி, அரியாலை, யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

அனுமதி கிடைக்கப் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலை கிராம அலுவலர் அலுவலகங்களில் பார்வையிடலாம்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மக்கள வங்கிக் கிளையினரால் வழங்கப்படவுள்ளன. (ஐ-86-180)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு
14
-
07
-
1930



உதிர்வு
22
-
04
-
2000

**அமரர் சின்னத்துரை சோமசேகரம்**

(ஓய்வு பெற்ற யாழ். மாநகரசபை ஊழியர்)

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் தலைவனாய் எம் உயர்வுக்காக
நல்வாழ்வு காட்டிய எம் அன்பு ஐயாவே!
நீங்கள் ஓடி மறைந்தீர் மாதம் ஆறாய்
எங்கள் மனதில் என்றும் வீற்றிருப்பீர் பல்லாண்டு.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் சகோதரர்கள், பெறாமக்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

நிரந்தர முகவரி:
*39/2, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

தற்காலிக முகவரி:
*மயிலூர் வீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

(79698)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சரவணமுத்து கனகம்மா**

தோற்றம் 
25-01-1938

மறைவு
22-09-2000

பாசத்தோடு எம்மைத் தாலாட்டி
நெஞ்சினிலே சுமந்த தாயே!
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் திருவுருவாய்
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்திட்ட திருவிளக்கே!
இன்று எம் எல்லோரையும் கதறியழ விட்டு
இறைவனடி தேடிச் சென்றதேனோ?

உம் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*No.5, கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு.*

(79701)

# உதயன்

## இனிமேலாவது ரோஷம் வருமா?

நாடாளுமன்றத்தேர்தலில் தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் இரண்டிக்குமே அரசாங்கத்னதத் தனித்து அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கவில்லை.

ஆகையால் இரண்டில் எதுவாயினும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் மட்டுமே அரசாங்கத்தை அமைக்க வேண்டிய கட்டாயம் தோன்றியது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது கெட்டித்தனத்தால் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியையும் அமைத்துவிட்டது.

பிரதான கட்சி எதுவாயினும் சிறுபான்மைக் கட்சிகளின் உதவியுடன் ஆட்சி அமைக்கக் கூடாது. அதற்குப் பதிலாக அவை இரண்டும் சேர்ந்து ''தேசிய'' அரசாங்கம் ஒன்றையே நிறுவ வேண்டும் என்பதே பௌத்த குருமார்கள், சிஹல உறுமயக்காரர் போன்ற தரப்பினர்களின் விருப்பமாகவும் ஆலோசனையாகவும் இருந்தது.

பிரதான சிங்களக் கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைத்தால் மட்டுமே, சிங்கள மக்களின் நலன்களையும் உரிமைகளையும் உரிய முறையில் பேண முடியும்; போரைத் திறம்பட நடத்திப் புலிகளை அழித்து அதனை முடிவுக்குக் கொண்டு வர இயலும்; தமிழர்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் இல்லாததால் சில சலுகைகளை மட்டும் வழங்கி என்றென்றும் அவர்களை இரண்டாந்தரப் பிரசைகளாகவே வைத்திருககலாம் என்ற நோக்கங்களுடனேயே அவர்கள் இந்த ''அருமையான'' ஆலோசனையை வழங்கி வந்தார்கள்.

அதன் பிரதிபலனோ என்னவோ பொது மக்கள் ஐக்கிய முன்னணிஅரசுக்குஒத்துழைப்பு வழங்க, வெளியில் இருந்து ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி உத்தேசித்துள்ளது. இது சம்பந்தமான முடிவு நாளை உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கும் நிபந்தனையை — சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர நீதி ஆணைக்குழு, சுதந்திர பொதுச் சேவை ஆணைக்குழு ஆகியவற்றை இரண்டு வருடங்களுக்குள் அமைக்கவேண்டும் என்ற நிபந்தனையை — அரசு ஏற்றுக் கொண்டாலே ஐ.தே.கட்சியின் ஆதரவு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவற்றை விடவும் இன்னொரு கடும்நிபந்தனை: இந்த இரண்டு வருடங்களுக்குள் அரசாங்கம் அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்பதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் வெளியில் இருந்தாயினும் உள்ளே சென்றாயினும் ஒத்துழைக்க முடிவு செய்தால் அது இலங்கை அரசியல் களத்தில் பெரும் திருப்புமுனையாக அமையும். அரசியல் சரித்திரத்தில் பெரிய சாதனையாகியும் விடும். இரண்டு கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து செயற்படுவதற்கான ஆரம்பமாகவும் இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த முடிவு எங்கள் தமிழ்த் தலைவர்களுக்கு ஒரு நல்ல பாடமாக, முன்மாதிரியாக அமைய வேண்டும். இனிமேலாவது தமிழ் மக்களின் நலன் நாடிய விடயங்களில் ஒன்று சேர்ந்து செயற்படும் உணர்வு அவர்களிடம் பிறக்குமா? ரோஷம் உள்ளவர்களாயின் இனியாவது அது குறித்துச் சிந்திக்க வேண்டும்.

# துயருக்குள் அமிழ்ந்திருந்தாலும்
# இறைவனுக்குள் உறைந்திருப்போம்

நேபுகாத் நெசார் என்கிற மன்னன் அறுபது முழ உயரமும், ஆறுமுழ அகலமுமான பொற்சிலை ஒன்றைச் செய்விக்கின்றான். அதை அனைத்து மக்களும், கின்னரங்கள் முதலான கீத வாத்தியங்கள் முழங்கும் போது வணங்க வேண்டும் எனக் கட்டளையிட்டான். சொல்வது தங்கள் அரசர் என்பதால், அவரது கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனால் தங்களது உயிருக்கே ஆபத்து வரும் என்பதை மக்கள் உணர்ந்தபடியால், யாவரும் அரசனது கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றனர்.

ஆனாலும் அரசனுக்குக் கீழ்ப்படிவதிலும் பார்க்க இறைவனுக்குக் கீழ்ப்படிவதே உசிதமானது என்றகொள்கையுடைய சாத்ராக், மேசாக், ஆபேத்நெகோ என்பவர்கள் மாத்திரம் அரசனது கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள், இதனால் அவர்கள் அரச கட்டளைப்படி அரசனுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டார்கள். அரசன் அவர்களுக்கு இன்னுமொரு தருணத்தைக்கொடுக்கின்றான். அப்போது அவர்களுக்கு மிக அருகில் எரிகிற அக்கினிச் சூளையைக்காட்டி ''நீங்கள் பொற்சிலையை வணங்கிக் கொள்ளாவிட்டால் அந்த அக்கினிக்குள் போடப்படுவீர்கள்'' என்று அரசனால் அச்சுறுத்தப்பட்டார்கள். எரிகிற அக்கினிச் சூளை அவர்களுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அந்தத் தருணத்தில் கூறிய பதில்தான் மெச்சத்தக்கதும் உணர்வு பூர்வமானதுமாகும். ''நாங்கள் வழிபடும் எங்கள் கடவுள், எரிகிற தீச்சூளையிலின்று எங்களை விடுவிப்பார். அவர் அவ்வாறு விடுவியாமற்போனாலும் நாம் உமக்குப் பணியமாட்டோம்'' (தானியேல் 3: 18) இது எமக்கு விசுவாசத்தின் உச்சக்கட்டத்தை எடுத்துக் காட்டுகிறது. அரசனுக்குப் பயந்து, மெய் இறைவணக்கத்தைப் புறக்கணித்த ஏனைய மக்கள் மத்தியில், இறைவன் ஒருவனுக்கே பயந்து, வேறெந்த அதிகார வர்க்கத்துக்கோ அல்லது சர்வாதிகாரருக்கோ அடிபணியாது வாழ்ந்த இம்மூவரினதும் வாழ்வு எமக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு அல்லவா?

எமக்கு முன்பாக எவ்வளவு பாடுகள்? எவ்வளவு வேதனைகள்? எரிகிற அக்கினி போன்று

**ஞாயிறு நற்பிரசாதம்**

எம்மை உயிருடன் எரிக்கும் எவ்வளவு மனவேதனைகள்? இவை யாவும் எமக்கும் இறைவனுக்குமுள்ள உறவுப்பாலத்தைத் தகர்த்துப் போடுகிறதா? அல்லது எமது இறைவனது உறவுப்பாலத்தை இன்னும் இறுக்கமாக்குகிறதா? எமது வாழ்வு இறைவனுக்கு மட்டுமே பயந்து அவர் ஒருவரையே அடிபணிந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்றவர்களின் வாழ்வாக அமைகிறதா? அல்லது மெய் இறைவணக்கத்தை உலக ஆதிக்கங்களுக்காக மறுதலித்த ஏனைய மக்களது வாழ்வாக அமைகிறதா?

அண்மையில் நடைபெற்ற போர்ச்சூழலில் தனது கணவனையும், மகனையும் பறிகொடுத்த ஒரு தாயை அண்மையில் சந்தித்தேன். தனது வாழ்வில் நடைபெற்ற படுபயங்கரமான சம்பவம் பற்றி மிகவும் துயருடன் எடுத்துரைத்த அந்தத் தாயினது கதை கேட்போரது கண்களை நிச்சயம் கலங்க வைக்கும் அவ்வளவு துயரையும் கேட்ட பின்பு, நான் அவ்விடத்தை விட்டுப்புறப்படும் போது அந்தத் தாய் என்னிடம் வந்து நம்பிக்கை ஒளிவிடச் சொன்ன வசனம் என்னைப் புல்லரிக்க வைத்தது ''எனக்காகவும் இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.''

சாதாரண மனித நிலையில் வாழ்வே சூனியமாகிப் போன அந்தத் தாய் போன்று இன்று எத்தனை பேர்? அந்தத் தாயினது அனுபவம் போன்று எத்தனை அனுபவங்கள்? இவற்றுக்கு மத்தியிலும் இறைவனில் விசுவாசமாக இருப்போர்களது விசுவாசமே மெச்சத்தக்கதாகும். பொன் புடமிடப்படும் போது தான் ஒளிர்வு கூடும். நெருப்பில் சுடச்சுட ஒளி பிரகாசிக்கும். அது போன்றுதான் சோதனைகள், வேதனைகள் வரும் போதுதான் ஒரு மனிதன் எதையும் தாங்கும் இதயம் பெறுகின்றான். நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றோம்? அல்லது இருக்கப்போகின்றோம்? என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

சிந்திப்போம்! செயற்படுவோம்!!

- அருள் திரு.
**பி. தேவதாஸ்**

# இழப்புகளை ஈடுசெய்யாத நிலையில் சம்பள உயர்வு வழங்குவது கடினம்

## கூட்டுறவுச் சங்கத் தலைவர் விளக்கம்

சங்கப்பணியாளர்களுக்கு வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க புதிய சம்பள உயர்வை வழங்குவதற்கு சங்க நிர்வாகம் விருப்பம் கொண்டிருந்த போதிலும் சங்கத்தின் நிதி நிலைமை அதற்கு இடம்கொடுக்க முடியாதுள்ளது. சங்கத்தில் இதற்குத் தேவையான மேலதிக லாபப் பணம் போதியளவு தற்போது இல்லாமல் உள்ளது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ. அரியரத்தினம் சங்கப் பணியாளர்களுக்கு புதிய சம்பள உயர்வை தற்போது வழங்க முடியாதிருப்பது குறித்துத் தகவல் தருகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் விளக்கமளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகால அனர்த்தங்களின் போதும், இடப்பெயர்வுகளின் போதும் எமது சங்கானை ப. நோ. கூ. சங்கம் உட்பட பல சங்கங்களுக்கு பொருள் இழப்பு, சொத்துச் சேதம், கட்டட சேதம், வாகன பறிமுதல் ஆகிய வற்றினால் ஒவ்வொரு சங்கத்திற்கும் சுமார் ஒரு கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கான நஷ்ட ஈடு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. எமது சங்கத்தின் நஷ்ட விவரங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம். அத்துடன் தனிப்பட்ட வர்த்தகர்கள் கப்பல் மூலம் பெருமளவு பொருள்களை கொண்டு வந்து விற்பனை செய்வதால் எமது சங்கங்கள் அவற்றுடன் போட்டிபோட்டுக் கொண்டு விற்பனை செய்ய முடியாத நிலையும் உள்ளது. அத்துடன் தனியார் வர்த்தகர்களை போல பெரும் தொகையான பொருள்களை கொண்டு வருவதற்கும் சங்கங்களிடம் முற்பணம் செலுத்த முடியாத நிலைமையும் உள்ளது. பெரும் தொகையை முதலீடு செய்ய சங்கங்களிடம் நிதி இல்லாமல் உள்ளது. 24 சங்கங்கள் இணைந்து செயற்படும் சமாசத்தின் மூலம் பொருள்களைக் கொண்டு வந்து விநியோகிப்பதிலும் கூட பல கஷ்டங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை சமாசம் பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டுவந்து 24சங்கங்களுக்கும் பங்கீடு செய்து விநியோகம் செய்து வருகின்றது. இவ்வாறு பங்கீடு செய்யப்படும் பொருள்கள் ஒரு மாதத்திற்குக் கூட சங்கங்களுக்கு போதாமல் உள்ளன. ஒவ்வொரு மாதமும் கொழும்பிலிருந்து இங்கு பொருள்களை கொள்வனவு செய்து கொண்டு வருவதில் சமாசத்திற்கு கப்பல் அனுமதி பெறுவதிலும், முதலீடு செய்வதிலும் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இன்றுள்ள நிலையில் ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கமும் சுமார் 90 வீதம் வங்கியின் மேலதிகப் பற்றிலிருந்தே இயங்கி வருகின்றன. வங்கியிலிருந்து 18 சதவீத வட்டி மூலம் கடன் பெறப்படுகின்றது.

இந்தக் கஷ்ட நிலைகளை சீர் செய்வதற்கு அரசாங்கம் அல்லது பொது நல நிறுவனங்கள் குறைந்த வட்டிக்கு அல்லது வட்டி எதுவும் இல்லாமல் நிதி உதவி வழங்க முன்வர வேண்டும். அரச சார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்களும் இது விடயத்தில் சங்கங்களுக்கு உதவ முடியும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வினை வழங்குவதற்கும். இப்பகுதியில் கல்வி, மற்றும் சுகாதார சமூக நலப்பணிகளுக்கு உதவுவதற்கும் சங்கத்தின் நிதிநிலைமையை மேம்படுத்தப்படவேண்டியது அவசியம். சங்கம் தனித்து நின்று இதனை நிறைவேற்ற முடியாதுள்ளது. அரசாங்கமும், அரச சார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்களும் சங்கத்திற்கு உதவினால் இவை சாத்தியமாகும்— என்று தெரிவித்தார். (ஐ-135)

## பாராட்டு விழா

சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்ட தொல்புரத்தைச் சேர்ந்த க. வாமதேவனைப் பாராட்டிக்கௌரவிக்கும் விழா ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## உதவிப்பணம்

யாழ்ப்பாணம், ஒக் 20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள திருநெல்வேலி சந்தி உப-தபாலகம் ஊடாக மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்கான உதவிப்பணத்தை எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு உப-தபாலதிபர் கேட்டுள்ளார். [இ]

## மாணவர் விவரம் சேகரிப்பு

நெடுந்தீவு, ஒக். 22

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களின் விவரங்களைச் சேகரித்து வருகிறது.

இங்குள்ள சகல பாடசாலைகளிடமும் இந்த விவரங்களை கோரியுள்ளதாக சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

ஆண்டு தோறும் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களுக்கு சங்கம் 500 ரூபா பரிசு வழங்கி வருகின்றது. (ஐ — 111)

## ஊரடங்கு நேரம் குழந்தை பிரசவித்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 22

ஊரடங்கு அமுலில் இருந்த நேரம் வீட்டில் பிரசவித்த இளம்தாய் ஒருவர் நான்கு மணித்தியாலங்கள் நஞ்சுக்கொடி வெளியேறாத நிலையில் உயிரிழந்தார்.

திருநெல்வேலியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எஸ். மகாலட்சுமி (வயது 34) என்ற இளங்குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

இப்பெண்ணுக்கு நள்ளிரவு வேளை பிரசவவேதனை ஏற்பட்டதாகவும் ஊரடங்கு அமுலில் இருந்ததாலும், வாகன வசதி கிடையாததாலும் வீட்டிலேயே பிரசவம் நடைபெற்றது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

நள்ளிரவு 12 மணிக்கு குழந்தை பிரசவமாகியது என்றும் காலை 4.15 மணி வரை நஞ்சுக்கொடி விழாத நிலையில் — யாழ். ஆஸ்பத்திரியில் பிரஸ்தாப பெண் அனுமதிக்கப்பட்டார் என்றும் — எனினும் அவரைக் காப்பாற்ற முடியாது போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை 4.30 மணி அளவில் அப்பெண் மரணமானார். குழந்தை சுகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது ரி. ஜெயரட்ணம் மரண விசாரணையை நடத்தினார். (இ-15)

**உதய வாக்கு**

மகிழ்ச்சியுள்ள வாழ்க்கை நல்லொழுக்கத்திலேயே பொதிந்துள்ளது.

—லத்தீன்—

## நாளை

**ஐப்பசி 7**

**திங்கட்கிழமை**

திதி: ஏகாதசி முன்னிரவு 6.55 வரை.

நட்சத்திரம்: மகம் முற்பகல்: 10.29 வரை

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 12.02 — 1.32

ராகுகாலம்: 7.32— 9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# அறிவித்தல்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கடிதத் தலைப்பு

(LETTER HEAD) றப்பர் முத்திரை (RUBBER STAMP) தலைவர் ஒப்பம் என்பவை போலியாகத் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளில் வாழ்பவர்களுக்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்ற கடிதங்கள்/ சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இது ஒரு சட்ட விரோத செயல்மட்டுமன்றி இவ்வாறான போலிச் சான்றிதழ்கள் / கடிதங்கள் பெற எவரிடமும் அணுக வேண்டாமெனவும் கேட்டுக் கொள்கின்றோம். இது விடயமாக மேலதிக விவரங்கள் பெறவிரும்பின் கிளைத் தலைமையகத்துடன் பிரிவுகள் மூலமாக தொடர்பு கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சேவையில்
கௌரவ உப செயலாளர்.

இ. செ. சி. சங்கம்.,
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/13527)

# கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபனத்தின் ஆயுட்கால ஊழியரான

## திரு. பொன்னுத்துரை குணசிங்கம்
(சிவம்)

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆ. இராசையா அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
209. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/13526)

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

எமது அன்புத் தெய்வம்

## அமரர் ஐ. துரைராசா
(அதிபர், வண். நாவலர் ம. வி)

அவர்கள் விபத்துக்குள்ளாகிய வேளையிலிருந்து இறுதி வரை சகல உதவிகளையும் செய்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலியைப் பத்திரிகையில், துண்டுப்பிரசுரங்களில் வெளியிட்ட சகல பாடசாலைச் சமூகத்திற்கும், பழைய மாணவர்கள், மன்றங்கள், அமைப்புக்களுக்கும், மலர்வளையம், மலர் மாலை அஞ்சலியுரை அளித்த அன்பர்களுக்கும் உரிய நேரத்தில் பூதவுடலைக் கையளித்த யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், இறுதி ஊர்வலத்தை ஒழுங்கு செய்த யா/ வண். நாவலர் சமூகத்துக்கும், பழைய மாணவர், பெற்றோர், அயலவர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.
சகோதரர்கள்.

திருமதி கௌ. துரைராசா,
496, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம் (79720)

# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 02 — 06 — 1936

உதிர்வு 22 — 10 — 1992

## திருமதி ராணி பாலசிங்கம் (மம்மி)

விண்ணை அடைந்து எட்டாண்டு
ஆயிடினும், வண்ண மொழி பேசி
அன்போடு எம்மை அணைத்துக் காத்திட்ட
உன் அன்பை என்றும் மறவோம்.

- குடும்பத்தினர்.

இல 3, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (79703)

# மாணவர் கௌரவிப்பு

நெல்லியடி, ஒக். 22

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வட மாகாணத்தில் 182 புள்ளிகளைப் பெற்ற வல்லை சிவகுரு வித்தியாலய மாணவன் புஷ்பராசா சிவரூபன், வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனை அபிவிருத்திச் சபையால் இன்று காலை 9 மணிக்கு கௌரவிக்கப்பட உள்ளார்.

வல்லை சிவகுரு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் த. தவேந்திரராசா, தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், 1999 ஆம் வருடமும் இந்த வருடமும் தடகள விளையாட்டுப் போட்டிகளில் முதல் பரிசு பெற்ற ப. லேந்திரா வசந்த் என்னும் மாணவனும் கௌரவிக்கப்படவிருக்கின்றார்.

இவ் விழாவில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டாக்டர் கே. மயில்வேறும் பெருமாளும் வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி சிவராசாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (ஐ—109)

# சாஹித்திய விழா

நெல்லியடி, ஒக். 22

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் அனுசரணையில் பிரதேச சாஹித்திய விழாவும், 30 கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் காலை 8 30 மணி முதல் மாலை 6 மணி வரை இவ்விழா இடம்பெறும்.

காலை ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக செயலாளர் செல்லையா மெற்றாஸ் மெயில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இவ் விழாவில் 'காத்தவராயன்' 'மயானகாண்டம்' 'பூதத்தம்பி' போன்ற நாடகங்களும் இடம்பெறும். அதனையடுத்து நடைபெறவுள்ள வாழ்த்துரையில் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்து கொள்வார்கள்.

இப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சுமார் 30 மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர். (ஐ-109)

# மாதாந்த பயிற்சி வினாத்தாள்கள்

தரம் 3 முதல் 10 வரை
சகல பாடங்களுக்கான
வினாத்தாள்கள்
விற்பனைக்குண்டு.

**நாவலர்**
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(79721)

# புலமைப் பரிசில் 2001
## 10 ஆவது பரீட்சையில் கூடிய புள்ளி

| | |
|---|---|
| ந. திருத்தணிகன் | - 179 |
| நி. ஜனலக்ஷன் | - 169 |
| கு. லஜிந்தன் | - 168 |
| வெ. ஜெயப்பிரசாந்த் | - 166 |
| ஜெ. திரோசன் | - 164 |

ஊக்குவிப்பு I வெளிவந்து விட்டது.
அடுத்த பரீட்சை இன்று.

**BOND - யாழ் நகர்.**
(79733)

# சாவகச்சேரியில் இயங்கிய
# கொத்தணி களஞ்சியத்தில் இருந்த பெருமளவு மதுசாரம் விரயமாகியது

நெல்லியடி, ஒக். 22

சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி களஞ்சியக் கட்டடம் பலத்த சேதமடைந்துள்ளது. அங்கு கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு மதுசாரம் வீணாக விரயமாகியுள்ளது.

கடந்த வியாழன் காலை சாவகச்சேரிக்குச் சென்று திரும்பிய கொத்தணித் தலைவரும், பொது முகாமையாளரும் இத் தகவலைத் தெரிவித்துள்ளனர்.

கள்ளிலிருந்து வடிக்கப்பட்டு, கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மதுசாரம், கொள்கலன்கள் உடைந்து வீணாக விரயமாகியுள்ளது. இக் கட்டடப் பகுதிக்குள் ஷெல் துண்டுகள் சிதறிக் காணப்பட்டன. ஒரு சில ஆவணங்களை மட்டும் மீட்க முடிந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ-109)

# மரண அறிவித்தல்கள்

## பாலசுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா
(இந்திரன்)

சாவகச்சேரி கோயில் குடியிருப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா ஜேர்மனியில் 20 - 10 - 2000 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி. சு. பாலசுப்பிரமணியம் (சேர்மன் கோபால்)—இராசலட்சுமியின் அன்பு மகனும், மல்லாகத்தைச் சேர்ந்த அருந்தவநாயகியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், குகதாசன், கற்பகவல்லி, ரஞ்சினி, குகநேசன், மோகனதாசன், சகலகலாவல்லி, பேரின்பதாசன், கலைவாணி, கிருஷ்ணதாசன், குலலோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டீஸ்பேர்க் மேற்கு ஜேர்மனியில் நடைபெறும்.

தகவல்:
பா. பேரின்பதாசன் (அப்பு)
பா. குகநேசன்,
(சகோதரர்)

தற்காலிக முகவரி:
குவாலி வீதி,
உடுப்பிட்டி. (சி/13528)

## டாக்டர் முத்தையா சோமகேசன்

307, பிரதான வீதி, திருகோணமலையைச் சேர்ந்த டாக்டர் முத்தையா சோமகேசன் அவர்கள் நேற்று (21-10-2000) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரபல சித்த வைத்தியர் முத்தையா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், திருமதி மங்களேஸ்வரி (ஓய்வு பெற்ற இசை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், திருமதி உஷா ஜெய்ஷங்கர், திருமதி மீரா தவப்பிரியன், திருமதி சீதா தமிழ்ச்செல்வன், சித்தார்த்தன், மகிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (22-10-2000) இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சந்திரமதி சிவானந்தன்
மைத்துனி
(ஆசிரியை, யா. றோ. க. த. க பாடசாலை)

றோ. க. தேவாலய முன்
ஆடியபாத வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (79731)

## திருமதி சின்னத்துரை வள்ளிப்பிள்ளை

அரியாலையைச் சேர்ந்த திருமதி வள்ளிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (21—10—2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை (முன்னாள் முகவர், அரியாலை மண்ணெண்ணெய் நிலையம்) அவர்களின் அன்பு மனைவியும், சுசிலாவதியின் அருமைத் தாயாரும், செல்வநாதனின் மாமியாரும், கதிரேசு, முருகேசு ஆகியோரின் சகோதரியும், விஜிலா (மாணவி, வெளிவாரிப்பட்டப்படிப்பு), சுசிலா (மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), சிவானந்தன், சர்வானந்தன் (மாணவர்கள், யா/ மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22-10-2000 ஞாயிறு காலை 10 .00 மணிக்கு 22, கலைமகள் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
ஆ. செல்வநாதன்
(மருமகன்)

22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (79726)

# நிமலராஜனின் படுகொலைக்கு கண்டனங்களும் அனுதாபங்களும்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்ப்பாண பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலையைக் கண்டித்தும் அனுதாபம் தெரிவித்தும் அரசியல் கட்சிகளும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து பல அமைப்புகளும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. அவற்றில் சில வருமாறு:-

## ஐ.பி.சி. தமிழ்

ஊரடக்கப்பட்ட வேளையில் ஐ.பி.சி. தமிழ் குடும்பத்தின் ஓர் உறவு - யாழ்ப்பாணம் - செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் அவர்கள் ஆயுதந்தரித்த குழுவொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

ஐ.பி.சி. தமிழின் ஆரம்ப காலங்களிலிருந்து அதன் செய்தித்துறையின் யாழ்ப்பாணச் செய்தியாளராக கடமையாற்றி வந்த நிமலராஜன் அவர்களை நினைத்துப் பார்க்கின்றோம்.

ஐ.பி.சி. தமிழின் செய்தித்துறையின் முக்கியமான மனிதர் நிமலராஜன் அவர்கள். தனது செய்திகளால் ஐ.பி.சி. தமிழின் செய்திகளுக்கு அழகும் வலிமையும் சேர்த்தவர்.

போர்சூழலில், பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் களநிலைவரங்களை நேரடியாகச் சென்று திரட்டித் தருவதிலும், போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல்களை அனைத்துலக ரீதியில் எடுத்துச் சொல்வதிலும், சிறிலங்காப் படையினரின் மனிதவுரிமை மீறல் நடவடிக்கைகளை செய்தியாளனுக்கே உரிய போர்க்குணத்துடன் எதிர்த்து நின்றதிலும் நிமலராஜன் அவர்களுக்கு நிகர் அவரே.

யாழ்ப்பாணத்தின் அவலங்களை தனக்கே உரிய போர்க்குணத்துடன் ஐ.பி.சி தமிழினூடாக நேர்மையாகவும், நடு நிலைமையுடனும் அனைத்துலகிற்கும் எடுத்தியம்பி வந்த நிமலராஜன் அவர்களை ஆயுதந்தாங்கிய ஜனநாயக விரோதக் குழு சுட்டுக் கொன்றதை ஐ.பி.சி. தமிழ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

## சூரியன் எவ்.எம்.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலையை சூரியன் எவ்.எம். கடுமையாகக் கண்டிக்கின்றது. ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சூரியன், சன், கோல்ட் ஹிரு, தரு ஆகிய சேவைகளின் செய்தித் தொடர்பாளர் நிமலராஜனின் கொலை ஊடகத்துறைக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பாகும் என ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரேனர் சிலவா தெரிவித்துள்ளார். அன்னார் எமது ஒலிபரப்புச் சேவைகள் தவிர்ந்த வேறு பல ஊடகங்களுக்கும் பணியாற்றினார்.

நடுநிலையுடனான உண்மைச் செய்திகளை திரு.நிமலராஜன் எப்பொழுதும் வழங்கி வந்தார். அவர் பொதுமக்களின் நலன்களில் மிகுந்த அக்கறையுள்ள பிரசித்தமான ஊடகவியலாளராகத் திகழ்ந்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் திரு. நிமலராஜன் யாழ்.நிகழ்வுகளை சர்வதேச சமூகத்துக்கு விவரத்துடன் வெளியிட்டார்.

அவருடைய உயிருக்கு அச்சுறுத்தல்கள் பல விடுக்கப்பட்ட பொழுதிலும் தனது கடமையை தலைவணங்காது செய்தார்.

அவரின் தமிழ் மற்றும் சிங்கள பாண்டித்தியம் இரு சமூகத்தையும் மிக நெருக்கமாக்கியது. யாழ்ப்பாண உண்மை நிகழ்வுகள் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதை தடுக்கும் நோக்கமாகவே இக்கொலை இடம்பெற்றிருப்பதாக நாம் நம்புகிறோம்.

இலங்கை ஊடகவியற்துறையில் நிமலராஜனின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடம் நிரப்பப்படுமா என்பது சந்தேகமே.

## வர்த்தக ஊழியர் சங்கம்

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை செய்யப்பட்டது ஒரு கொடூரமான செயலாகும். இது பத்திரிகா தர்மத்திற்கு விடுக்கும் சவாலாகும்.

இத்தகைய அநாகரிகச் செயல் எதிர்காலத்திலும் நடைபெறாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது சகலரதும் கடமையாகும் இக்கொலையை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

பி.பி.ஸியின் செய்தியாளரும் மற்றும் சர்வதேச செய்தி ஊடகங்களில் பிரபல பத்திரிகையாளருமாக விளங்கிய மயில்வாகனம் நிமலராஜன் கிரனேட் மற்றும் துப்பாக்கி சகிதம் வந்த ஆயுதபாணிகளால் அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரமான சம்பவத்தைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆளாத்துயரமும் அடைவதோடு இந்த நிகழ்வை யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

உண்மைக்காகக் குரல் கொடுக்கும் பத்திரிகையாளர்கள் மீதான இவ்வாறான தாக்குதல்கள் இன்று எம் தேசத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் மாற வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் பலமுனைகளில் முடுக்கி விடப்பட வேண்டிய அவசியமான காலகட்டம் இதுவாகும்.

## ஐ.தே.க. சார்பு யாழ்.எம்.பி.

துணிச்சலும் ஆற்றலும் மிக்க இளம் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனுடைய படுகொலை இன்றைய காலகட்டத்தில் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். இவர் தமது இளம் வயதிலேயே குடாநாட்டு மக்களின் இன்னல்களை பல மொழிகள் மூலம் பல நாடுகளுக்கும் அறியத் தந்தவர்.

குறிப்பாக குடாநாட்டு தமிழ் மக்களின் சார்பாக துணிச்சலாக உண்மைகளை வெளிப்படுத்திய ஒரு குரல் ஓய்ந்துவிட்டது.

இப்படுகொலை யாழ்.குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் எதிராக வைக்கப்பட்ட வேட்டாகும்.

## உடற்கல்வி மாணவர் மன்றம்

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக சர்வதேச சமூகத்தில் குரல் கொடுத்த துணிச்சலான பத்திரிகையாளன் நிமலராஜன் மீதான மிலேச்சத்தனமான செயல் கண்டனத்துக்குரியது. யுத்தப் பிரதேசத்தில் மனிதக் கேடயங்களாக பயன்படுத்தப்பட்ட மக்களை மீட்பதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவர் நிமலராஜன் ஆவார். விஷமிகளின் இப்படிப்பட்ட செயல்களால் தமிழர்களின் சுய உரிமைப் போராட்டத்தை அடக்கிவிட முடியாது.

## தென்கிழக்கு செய்தியாளர் சங்கம்

மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை மிலேச்சத்தனமானது. உண்மைகளை உலகறியச் செய்து ஊடகத்துறைச் சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்த நிமலராஜனின் பிரிவு கிழக்கிலங்கையிலுள்ள ஊடகவியலாளர்களை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

தொடர்புசாதனத் துறையினரை வன்முறைரீதியில் அடக்கியாளமுனையும் ஜனநாயக விரோதிகளின் இச்செயல் குறித்து அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## புதிய ஜனநாயக - முன்னணி

பத்திரிகையாளர் நிமலராஜன் சுட்டுக்கொல்லப்பட்ட செயல் தேர்தல் முடிந்த கையோடு திட்டமிட்டுச் செய்யப்பட்ட அப்பட்டமான அரசியல் படுகொலையாகும் என்பதில் சந்தேகம் இல்லை. இது கருத்துச் சுதந்திரத்துக்கு வைக்கப்பட்டுள்ள ஒரு வேட்டு. அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஏனையோருக்கும் விடுக்கப்பட்டுள்ள ஜனநாயகத்துக்குப் புறம்பான அச்சுறுத்தல்.

கொலைக் கலாசாரத்தை எதிர்த்து ஜனநாயகத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் மனித உரிமையையும் வற்புறுத்தும் சகல மக்களும், பொது அமைப்புக்களும் இந்தக் கொலைக்கும் தாக்குதலுக்கும் எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

சர்வதேச தரம் மிக்க பத்திரிகையாளன் நிமலராஜனின் படுகொலையையும் அவரது குடும்பம் மீதான தாக்குதலையும் எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

## மக்கள் ஜனநாயக பேரவை

தமிழை நேசித்த, தமிழரின் துயரங்களை சர்வதேசம் எங்கும் ஒலிக்கச் செய்த ஒரு தமிழ்மகனை இழந்திருப்பது தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். நிமலராஜன் மீது பொழிந்த முகம் தெரியாத துப்பாக்கிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்குமாறு அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச அளவில் அனைத்து செய்தி ஊடகங்களும் அவரது செய்திகளையும், ஆக்கங்களையும் அறியும். ஆனால் அவர் சமூகத்துக்கு ஆற்றிய ஏராளமான சேவைகளைப் பலர் அறியமாட்டார்கள். அவர் பேனா முனையில் நம்பிக்கையுடன் ஒவ்வோர் தமிழ்மகனின் சிந்தனையிலும் எண்ணங்களை ஊன்றெடுக்க வைத்தவர்.

மௌன அஞ்சலிகளை அவருக்குச் செலுத்துவதோடு மட்டும் நிறுத்தாமல் இவ்வாறான அராஜகச் செயல்களுக்கு அனைத்துப் பத்திரிகையாளர்களும் தமிழ் சமூகமும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.

## கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்

சர்வதேச ஊடகங்களினதும் உள்ளூர் ஊடகங்களினதும் யாழ். செய்தியாளராக கடமையாற்றிய நிமலராஜன் துணிச்சல் மிக்க செய்தியாளன். யுத்தகள செய்திகளை நேரடியாகச் சென்று திரட்டி வருவதிலும் யுத்த அவலங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல்களை உலகறியச் செய்வதிலும் மனித உரிமை மீறல்களை சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்துவதிலும் நிமலராஜன் தனிமனிதனாக நின்று ஆற்றிய பணியை மறக்க முடியாது. அநீதிகள்,மோசடிகளை செய்தியாளனுக்கே உரிய மூர்க்கத்தனத்துடன் எதிர்த்து நின்ற நிமலராஜனின் எழுத்துக்களை, கருத்துக்களை நேர்மையுடன் நேரில் சந்திக்க வக்கற்றவர்கள் கோழைத்தனமாக துப்பாக்கி கொண்டு படுகொலை செய்திருக்கின்றனர். இந்தக் கொடூரசெயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நிமலராஜனின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது. அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருடனும் யாழ்ப்பாண செய்தியாளர்களுடனும் எமது பெருந்துயரை பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

ஈழத் தமிழர்களின் நடப்பு உண்மை நிலையை சர்வதேசங்கள் அனைத்துக்கும் எடுத்துக் கூறிய சான்றாதாரமாகவும் இலங்கையில் எழுத்துச் சுதந்திரத்துக்கு தோண்டப்பட்ட இன்னுமொரு புதைகுழியாகவும் வெகுசன தொடர்பு ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொடூரப் படுகொலை அமைந்துள்ளது.

தேசிய நீரோட்டத்துடன் தமிழ் மக்களை இணைத்து அவர்களது அரசியல், பொருளாதார, சமூகக் கருத்துக்களை கருத்தூன்றிக் கவனிப்பதற்காக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தேர்தலும் அதன் அமைச்சரவைப் பதவியேற்பும் உலகுக்கு எடுத்துக் காட்டிய "ஜெயகோஷமாகவே" மயில்வாகனம் நிமலராஜனின் அராஜகக் கொலை நிகழ்ந்துள்ளது.

ஒரு உன்னதமான எதிர்காலத்துக்கான தேடலுடன் எழுத்துக்களைப் பதிக்கும் படைப்பாளிகள் மத்தியில் மட்டுமல்லாது, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திலும் பெரும் விசனத்தையும், வெறுப்பையும் இந்த அநாகரிகமான படுகொலை ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். இந்துசமய பேரவை

போர்க்கோலம் பூண்ட ஜனநாயகவாதியாகவும் யாழ்.நகரின் துணிச்சலுள்ள பத்திரிகையாளர்களின் வரிசையில் முதன்மையானவராகவும் விளங்கியவர் மயில்வாகனம் நிமலராஜன்.

எழுத்தாளர்களைப் படுகொலை செய்வது ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காத செயலாகும். இந்த நாடு மிகுந்த நெருக்கடி மிக்க சூழ்நிலையில் இருக்கின்ற போது இத்தகைய சம்பவங்கள் உண்மைச் சமாதானத்தைக் குலைத்துவிடும் என்று அஞ்சுகின்றோம்.

## நீதி சமாதான ஆணைக்குழு

எம்மவரின் அவலங்களை துணிச்சலுடன் வெளிப்படுத்தி, சர்வதேச சமூகத்தின் கவனத்தை நம்பால் ஈர்த்து, செய்தித் துறையில் அரும் பணியாற்றி வந்த பத்திரிகையாளர் நிமலராஜனை கொலைசெய்த கொடூரத்தை மிக வன்மையாகக் கண்டித்து நிற்கின்றது எமது ஆணைக்குழு.

வானொலியில் அவர் வழங்கி வந்த செய்தியறிக்கைகள் மூலம் மாத்திரம் அவரை அறிந்தவர்களுக்கு, அவர் ஓர் தகவல் வழங்கும் செய்தியாளர் மாத்திரமே. அவருடன் கூடிப்பழகி வேலை செய்தவர்களுக்குத்தான் தெரியும் அவருடைய அரிய பண்புகள், மனித நேயம், துணிவு, பக்கச்சார் பின்மை, நிதானம்.

அவசரகாலச்சட்டத்தின் விளைவாக எழுந்த செய்தித் தணிக்கை, ஒன்று கூடிக் கருத்துப் பரிமாறும் உரிமை மட்டிலான நெருக்கடி, நடமாடுவதற்கான கட்டுப்பாடுகள், பல்குழல் பீரங்கிகள் போன்ற சவால்களுக்கு துணிச்சலுடன் முகம் கொடுத்து செயற்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனை கொலை செய்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகத்தின் கனாகனம் அற்ப சொற்பமானதல்ல.

'ஜனநாயகம்' என்ற பதம் பரவலாகப் பாவிக்கப்படும் இக்கால கட்டத்தில், ஜனநாயகத்திற்கெதிராகப் புரியப்பட்ட பாதகச் செயல் இது. தமிழ்மக்களை நேசிப்பவர்களோ ஜனநாயக விழுமியங்களை மதிப்பவர்களோ இக்கொடூரக் கொலை குறித்து மௌனம் சாதிக்க முடியாது.

இந்த அராஜகத்திற்கு உடன் முற்றுப்புள்ளியிடப்பட வேண்டும் என்பது எமது ஆவலான எதிர்பார்ப்பு.

★


**கரணவாய் மூத்தவிநாயகர் ஆலய**
**தர்மகர்த்தா சபை வழங்கும்**
**தரம் ஐந்து மாணவர்களுக்கான**
**புலமைப்பரிசில் ஊக்குவிப்புத் திட்டம்**

இடம் :- ஆலய மண்டபம்
திகதி :- இன்று (22.10.2000) காலை 10 மணி
தலைவர்:- திரு.க.பொன்னம்பலம்
(தர்மகர்த்தா சபை உறுப்பினர்)
பிரதமவிருந்தினர் :- திரு.க.நடராசா
(சட்டத்தரணி ஜே.பி.யு.எம்.)
சிறப்பு விருந்தினர்:-
1. திரு.ம.தர்மகுலசிங்கம்
(பிரதம தர்மகர்த்தா)
2. ஸ்ரீலஸ்ரீ கைலாஸநாதக் குருக்கள்
3. ஸ்ரீலஸ்ரீ சட்டநாதக் குருக்கள்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

வைத்தியகலாநிதி
க.கேதீஸ்வரநாதன்
(தர்மகர்த்தா சபை உறுப்பினர்)
மூத்தவிநாயகர் ஆலயம்,
கரவெட்டி.

(C/13532)



*2001 இல் நூற்றாண்டு நிறைவு பெறும்*
**காங்கேசன்துறை யா/நடேஸ்வரக் கல்லூரி**
**புதிய அனுமதி - 2001**

கந்தரோடையில் இயங்கிக் கொண்டிருக்கும் யா/நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர்களின் செயற்பாட்டினால் புத்துணர்ச்சி பெற்று இயங்கவுள்ளது. இக்கல்லூரிக்கு 2001 இல் ஆண்டு 6க்கான அனுமதிகள் அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஏனைய வகுப்புகளிலும் மிகக் குறைந்தளவு வெற்றிடங்கள் உள்ளன. தகுதியான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**விண்ணப்ப முடிவு திகதி: 15.11.2000**

பழைய மாணவர் சங்கம்,
யா/நடேஸ்வரக் கல்லூரி,
கந்தரோடை.

*விளம்பர அன்பளிப்பு:*
"சுன்னாகத்தில் ஒரு சுந்தரபுரி
மத்திய சந்தையில் ஒரு மயக்கு மண்டபம்"
*புடைவைத் தினுசுகளின் சங்கமம்.*
*சிறந்த புடைவைத் தெரிவுக்கு இன்றே நாடுங்கள்!*
**ரஞ்சனா புடைவையகம்**
இல.4A, மத்திய சந்தை, சுன்னாகம்.
(79751)



**கண்ணீர் அஞ்சலி**

எமது பீட சக மாணவியான **மா.வாசுகி**
அவர்களின் அன்புச் சகோதரி
**தர்ஷினி மாணிக்கவாசகர்**
(விஞ்ஞானபீடம், 4ஆம் வருட மாணவி)
அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முதலாம் வருட
முகாமைத்துவ மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/13534)



பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவத்தின்போது காயமடைந்த நிமலராஜனின் தந்தையும், தாயும் நிமலராஜனின் இறுதிச்சடங்கை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் இருவரையும் நிமலராஜனின் பூதவுடலையும் படங்களில் காணலாம்.

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதீஷ்(பெருமாள் விசுவலிங்கம் - வவுனியா), கௌசிகா (பால சுப்பிரமணியம் மைதிலி - யாழ்ப்பாணம்), தேவமதி(ஜோர்ச் மாதாஜி - மன்னார்), மதியரசன் (புஸ்பராசா முகுந்தன் - யாழ்ப்பாணம்), ராசன் (சின்னையா யோகராஜா - கிளிநொச்சி), தாசன் (சிவலிங்கம் விக்னேஸ்வரன் - யாழ்ப்பாணம்), பரந்தாமன்/ரமணன்(மாணிக்கம் பிரதீபன் - யாழ்ப்பாணம்), வர்ணன (பேரின்பநாயகம் யோகேஸ்வரன்- யாழ்ப்பாணம்), பொன்மலை(வீரப்பன் அழகுராஜ் - கண்டி), தமிழ்மாறன் (அப்துல்லா ரகுமான் ஒட்டுசுட்டான்)புயலவன் (குமாரசிங்கம் கேதீஸ்வரன்- புதுக்குடியிருப்பு), இன்கனி (உதயகுமார் சுமதி - யாழ்ப்பாணம்), தம்பி (குருநாதன் குபேந்திரன்- யாழ்ப்பாணம்), வசந்தன்(சிவசோதி அரசகுமாரன் - மாங்குளம்) (இ-7)

## ஆயிரக்கணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனர். மகனின் பூதவுடலுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்திய பின்னர் அவர்கள் மீண்டும் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் பகல் இரண்டு மணிக்கு இரங்கல் கூட்டம் ஆரம்பமானது.

கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பத்திரிகையாளர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதகுருமார்கள் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து அவரின் பூதவுடல் கச்சேரி நல்லூர் வீதி, கண்டிவீதி ஊடாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு யாழ்.மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இரங்கல் திருப்பலியை யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரி வண பிதா அ.பேர்ணாட் ஒப்புக் கொடுத்தார்.

திருப்பலி முடிவில் யாழ்.ஆயர் பேரருள் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இவரது உடலை ஆசீர்வதித்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து பூதவுடல் மீண்டும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் மாலை 4.45 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரது பூதவுடல் ஊர்வலமாகச் சென்ற வீதிகளில் படையினர் ஆங்காங்கே காணப்பட்டனர். (இ-5-9-51)

## நீதி அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் பாதிக்கப்படாத வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை பயங்கரவாத தடைச சட்டத்தின் கீழ் கைதாகி விசாரணைகள் எதுவுமின்றி சிறைகளில் வாடும் தமிழர்களின் வழக்குகள் துரிதப்படுத்தப்படும் இப்படி அவர் மேலும் கூறினார்.

## இராணுவத்துக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நவீன ஆயுதங்கள் இப்போது அரசிடம் உள்ளதால் களமுனையில் படைத்தரப்பில் இழப்புகள் குறைந்து வருவதாகவும் அதனை வெளிப்படுத்தி தேவையான ஆளணியினரைத் திரட்ட முடியும் என இராணுவ உயர் வட்டாரங்களில் நம்பிக்கை தோன்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

நாளை தொடக்கம் சுமார் இரண்டு வாரங்கள் நேர்முகப் பரீட்சைகளை மாவட்ட செயலகங்களிலும் இராணுவ முகாம்களிலும் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (அ-5)

## ஆயுதங்களை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப் புரிந்து கொண்டது மட்டுமல்லாமல்,தானாகவே தொப்பியை எடுத்து மாட்டிக் கொண்டு, நான் தம்மை இக்கொலையில் சம்பந்தப்படுத்திய தாக விளங்கிக் கொண்டு என்னைக் கண்டித்து அறிக்கை விட்டுள்ளார்.

நான் அன்று தொட்டு இன்றுவரை கூறுவதெல்லாம் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டோம் எனக் கூறிக் கொண்டு ஆயுதங்களுடன் நடமாடும் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையவேண்டும் என்பதே ஆகும்.

இக் கொலையை யார் செய்தார்கள் என்று கண்டுபிடிக்க சுதந்திரமான ஒரு விசாரணை வேண்டும். அப்படியானால் மக்கள் எதுவித பயமும் இன்றி தைரியமாக முன்வந்து சாட்சியமளிக்கும் சூழ்நிலை உருவாகவேண்டும். இத்தகைய கொலைகளைச் செய்பவர்களைப் பிடிக்க வேண்டும் என தம்பி டக்ளஸ் உண்மையாகவே விரும்பினால், அரசு கொடுக்கும் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டு ஆயுதங்களைத் திரும்ப அரசிடம் கையளிக்கவேண்டும். பல லட்சம் மக்களின் நலன் கருதி, சில நூறுபேர் இதைச் செய்யலாம் அல்லவா? டக்ளஸ் அவர்கள் சம்மதிப்பார்களா - என்றுள்ளது (அ)

## நிமலராஜனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை நாட்டவேண்டும் என்பதற்காக உயிர் ஆபத்தின் மத்தியிலும் சலிக்காது உழைத்தவர்-

அவரது இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள வேண்டும் என்பது எனது மனவிருப்பம். தென்னிலங்கை செய்தியாளர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதியளிக்காத அரசாங்கம் எனக்கு எவ்வாறு தரும்? அதனால் அந்த முயற்சியைக் கைவிட்டேன்-

நிமலராஜனின் காயமுற்ற பெற்றோருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை இச் செய்தி மூலம் தெரிவிக்கிறேன் - என்றுஅவர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தென்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்காக கடந்த வெள்ளியன்று பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்து விட்டு அனுமதிக்காகக் காத்திருந்தனர் என்றும் வெள்ளி அனுமதி கிடையாததை அடுத்து நேற்றுக் காலை அனுமதி கிடைக்கலாம் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்த போதிலும் ஏமாற்றம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரங்க நிலைகள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தரப்பில் 13 பேர் உயிரிழந்தனர். 62 பேர் காயமடைந்தனர்.வியாழக்கிழமை மோதல் ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 17 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 104 பேர் காயமடைந்தனர் என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (இ-7)


# அஞ்சலிகள்

பிரபல விஞ்ஞான ஆசிரியர்

**தேவா** அவர்களின் பாசமிகு புத்திரன்

## கௌசிகன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்.
BARATHY - சித்தன்கேணி,
பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்,
பொருளியற் கல்லூரி - இணுவில்.

(79740)



BRIGHTMAN
கல்வி நிலையம்
பிறவுன் றோட் - யாழ்நகர்
(அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க)
பிரிவு உ சிங்களம்
Бு. லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 23.10.2000 Mon - 4.00p.m.
(79707)



நாளை ஆரம்பம்!
A/L - 2001
DAY CLASS
மதியம் 12 மணி
ஆசிரியர் குழு
ACC. - D.SAM
COM. - பசில்
ECO. - ஜெயக்குமார்
ST. - தவசேகர்
LOG. - S.S.பவன்
TAM. - தமிழிந்திரன்
HIN. - ஸ்ரீஸ்
DRA. - பிறான்சிஸ்
GEO. - ஐங்கரன்
DMI
(Subra - 14, சித்தன்கேணி) (C/13500)



## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான கணனி நிறுவனம் ஒன்றிற்கு கணனித் துறையில் Type Setting அனுபவமுள்ள பெண் தேவை. மூன்று மாத கால மேலதிக பயிற்சி வழங்கப்படும். 25.10.2000 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

குறிப்பு:-
செய்முறைப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

தொடர்புகளுக்கு:-
விள.இல. 1120
மே/பா உதயன்.
(C/13473)



# மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தின் மாபெரும் மலிவு விற்பனை

| | ரூபா |
|---|---|
| பட்டர்சில்க், இன்ரகூலர், ஜோஜோ, பாபரா, 44" பிரின்ட் | 65.00 |
| பட்டர்சில்க், இன்ரகூலர், ஜோஜோ, பாபரா, 60" பிரின்ட் | 85.00 |
| சலஞ்சர் பிரின்ட் | 50.00 |
| சலஞ்சர் பிளேன் | 50.00 |
| ரோஸ்சில்க் சாறி | 225.00 |
| பூணம் சில்க் சாறி | 240.00 |
| லேடிசில்க் சாறி | 375.00 |
| காசிம் சில்க் சாறி | 375.00 |
| ரூபாலி சாறி | 375.00 |
| அல்னா சாறி | 375.00 |
| கனிக்கா சாறி | 375.00 |
| விமல் சாறி | 375.00 |
| ஹங்கர் சேட் | 175.00 |
| சாதாரண சேட் | 165.00 |
| ஜீன்ஸ் | 490.00 |

மலிவாகப் பெற்றுக்கொள்ள:-

## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,

44,42, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/9684)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி

கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி நேற்று (21.10.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா தங்கம்மாவின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் (அப்பையா) அன்பு மனைவியும், முத்துலிங்கம் (J.P) இராஜலட்சுமி, பொன்னம்மா, விக்கினேஸ்வரன் (ராஜா ஸ்ரோர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மலோஜினி, தவயோகநாதன் (ஹொலண்ட்), உதயகுமார் (ஜேர்மனி), சுரேஷ்குமார் (2000 ஆண்டு விஞ்ஞான பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகலிங்கத்தின் (லண்டன்) மாமியாரும், மயூரா, சுகாசினி, சுவேதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2000) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சுப்பிரமணியம்
(அப்பையா - கணவர்)

ஞா.பா.சங்க வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(C/13537)

## மருதர் முருகேசு

நவாலிவடக்கைச் சேர்ந்த மருதர் முருகேசு நேற்று (21.10.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதர் - சீதேவி தம்பதிகளின் இளைய புத்திரனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், கங்கேஸ்வரன் (ஜேர்மனி), கௌரி (ஆசிரியை, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை), கோமதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யோகினிதேவி கங்கேஸ்வரன் (ஜேர்மனி), இ.வதனவாசன் (யாழ்.ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், றொமினா, அனுஸ்டன், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.10.2000) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் (பழையநேரம்) தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம் பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கௌரி வதனவாசன்
(மகள் - ஆசிரியை)

குமரகிரி,
நாச்சிமார் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(C/13536)

## திருமதி ஆறுமுகம் பாக்கியம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை (தினேஷ் பேக்கரி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் பாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் யோகராஜா, திருமதி ஜோன்சன் நவமலர் ஆகியோரின் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப. 3.00 மணிக்கு தினேஷ் பேக்கரியில் நடைபெறவுள்ளது.

தகவல்:
சிவமூர்த்தி சிவலிங்கம்,
(உரிமையாளர்)
தினேஷ் பேக்கரி.

மானிப்பாய்.
(C/13538)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.